# விடுதலைப்புலிகள்

குரல் - 46 | மாசி - 1994 | அன்பளிப்பு: ரூபா 5/-


# பேரினவாதிகள் இணைகின்றனர்;

# சிங்களப் போர் அரக்கன் தயாராகிறான்!

இராணுவத்தின் ஆக்கிரமிப்பின்கீழ் இருக்கும் தென் தமிழீழத்திலும் வவுனியாவின் ஒருபகுதியிலும் நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டதாகக் காட்டுவதற்காக, அங்கே உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்த அரசு முடிவெடுத்துள்ளது.

இத்தகைய முயற்சிமூலம், இந்தப் போராண்டுக்குத் (94) தேவையான நிதியை அபிவிருத்திக்கான உதவி என்ற கோதாவில் வெளிநாடுகளிடமிருந்து பெற, அரசு பெருமுயற்சி செய்கின்றது.

எதிர்வரும் யூன் மாதம் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் வருடாந்த மாநாட்டில், உள்ளூராட்சித் தேர்தலை ஒரு சாட்டாக வைத்து, பெருமளவுநிதியைச் சிறீலங்கா அரசு கோரத் திட்டமிட்டுள்ளது.

கொடூரமான முறையில் இராணுவ ஆட்சி நடைபெறும் இப்பகுதிகளில், சுதந்திரமான முறையில் ஒரு தேர்தலை நடாத்த முடியாது என்று, பல அரசியலாளர்களும் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களும் கருத்து வெளியிட்டுள்ளன.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட விதங்களும் (இராணுவ முகாமுக்குச் சென்றவர்கள் வேட்பு மனுவில் கையொப்பம் இடும்படி மிரட்டப்பட்டதும் - இராணுவமேசென்று குறிப்பிட்ட சிலரை வேட்பாளராகப் பலவந்தமாகநியமித்ததும்), தேர்தற் பிரசாரம் நடைபெறும் முறைமையும் (இராணுவ - மற்றும் அதிரடிப் படை முகாம்களே பிரச்சார நிலையமாக இருப்பதும் - யானைக்கு புள்ளடியிடும்படி இராணுவத்தினரே மக்களை மிரட்டுவதும்) பி.பி.சி. செய்தி நிறுவனத்தினாலேயே அம்பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருந்தபொழுதிலும் மார்ச் 1ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்திவிடுவது என்பதில், ஐ. தே. கட்சி அரசாங்கமும் - படைத்தளபதிகளும் தீவிரமாகவே உள்ளனர்.

இதேவேளை ஒரு பாரிய இராணுவ நடவடிக்கைக்காக படைகள் தம்மைத் தயார்படுத்தி வருவதை, கொழும்பிலிருந்து வரும் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. கட்டாயம் பெரும்படையெடுப்பு நடந்தே தீரும் என்று, தரைப்படையின் →

## உள்ளே


* போரும் சமாதானமும் - அன்ரன் பாலசிங்கம்
* சிங்கள தேசம் எதைவிரும்புகின்றது? - புலிகளின் குரல்
* முறியடிக்கப்பட்ட முற்றுகை - ஒரு நோக்கு
* தென்தமிழீழத்து அவல வாழ்வு - நேர்காணலின் தொகுப்பு
* படை, அரண், நாடு! - உருவகம்
* சிறுவர் நிலையம்
* கடற்புலிகள் - நூல் மதிப்பீடு
* கப்டன் துளசிரா - சித்தா
* வெல்லும் வரை வேகம் குறைந்தால் செல்லும்வழி திசை மாறிவிடும் - கவிதை





* 'ஒப்பறேசன் தவளை'யில் எதிரியிடமிருந்து மீட்டுவந்த நீருந்து விசைப்படகின் மீது வெற்றியின் பூரிப்பில் தலைவர்.

இனித் தமிழினம் குனியாது - எமை எதிர்த்திடப் பகை துணியாது.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கைநிலைப்பாட்டிலும் - அணுகுமுறை வடிவிலும் சிறீலங்கா ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா ஒரு 'தெளிவான' கண்ணோட்டத்தை வைத்திருக்கின்றார்.

இனப்பிரச்சினையென்ற ஒன்று இங்கில்லை என்பதும், இருக்கும் பயங்கரவாதத்தை அரசபடையைக்கொண்டு அழிப்பதும்தான் ஜனாதிபதியின் நிலைப்பாடு. 'பேச்சு' என்பதை அதுவும் ''புலிகள் இயக்கத்துடன் பேச்சு'' என்பதை அவர் அடியோடு - உறுதியாக எதிர்க்கின்றார்.

பேரினவாத வெறியர்களான காமினி திசநாயக்கா போன்றோரும் இன்னும்பல உள்ளூர் - வெளிநாட்டு அரசியலாளர்களும் - இராஜதந்திரிகளும் விஜேதுங்காவின் கருத்துடன் உடன்படாவிட்டாலும், சிறீலங்கா ஜனாதிபதி தனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் விடாப்பிடியாகவே உள்ளார். அந்தவகையில் அவரை 'நேர்மையான பேரினவாதி' என்றுகூடச் சொல்லலாம்.

ஆனால் தன்னை ஒரு மிதவாதிபோலக் காட்டிக்கொள்ள விரும்பும் சிறீலங்காவின் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா, போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக குழப்பமான கருத்துக்களை வெளிப்படுத்தி குட்டையைக் குழப்பிவருகின்றார்.

முதலில், ''புலிகளுடன்பேசி தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தயார்'' என்றார்.

பின்னர், ''புலிகள் ஒரு தீர்வுத்திட்டத்தை அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும்'' என்றநிபந்தனை விதித்தார்.

அதன்பின், ''பிரபாகரன்தான் நேரடியாக வந்து பேசவேண்டும்'' என்றார்.

இறுதியில், ''புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தால்தான் அவர்களுடன் பேசமுடியும்'' என்றுள்ளார்.

பிரதமர் ரணிலின் இந்தக் குழப்பகரமான அறிவிப்புக்கள், சமாதானமுயற்சி தொடர்பான அவரது தயாரற்ற தன்மையையே புலப்படுத்துகின்றன.

அப்படியாயின் இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு சமாதானப் பேச்சுவார்த்தைக்குரிய சந்தர்ப்பமே இப்போது இல்லையா என்ற கேள்வி, மக்களிடம் எழுவது நியாயமே.

சமாதானச் சூழலை உருவாக்கவென யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் செய்யும் பெருமகன்களும் - மதகுருக்களும், புலிகளிடமுள்ள சமாதான விருப்பை சந்தேகத்துக்கு இடமின்றி அரசிற்கும் - உலகிற்கும் அறிவித்துள்ளனர். ஆனால் சிங்களத் தலைவர்களிடமிருந்து உருப்படியான எந்த ஒரு பதிற் சமாதான சமிக்ஞையும் வரவில்லை.

வெளிப்படையாகச் சமாதானச் சமிக்ஞைகளை விடுப்பது, இந்தத் தேர்தல் ஆண்டில் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு முடியாததொன்றாக இருக்கலாம்.

விடுதலைப் புலிகள் தமிழீழ

Liberation Tigers Of
TAMIL EELAM

## புலிகளின் குரல்

## சிங்கள தேசம் எதை விரும்புகின்றது?

ஆனால் புலிகள் இயக்கம் தொடர்பாக - தமிழரின் உரிமைப் போராட்டம் தொடர்பாக, சிங்களதேசத்தில் இன்று எத்தகைய கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன என்பது, கட்டாயம் கருத்தில் எடுக்கப்படவேண்டியதே.

புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம்போல உருவகப்படுத்தியும், தமிழரின் உரிமைப் போராட்டத்தை சிங்கள இனத்திற்கு வந்த பேராபத்துபோலச் சித்திரித்துக் காட்டியும் சிங்கள மக்களுக்கு வெறியூட்டிவருகின்றனர். இதில் ஆபத்தான விடயம் எதுவெனில், இந்த வெறிப் பிரச்சாரத்திற்கு நாட்டின் அதி உயர்ந்த பதவி வகிக்கும் ஜனாதிபதியே தலைமை வகிப்பதுதான்!

இதனால் தமிழ் - சிங்கள இன முரண்பாடு மேலும் மேலும் சிக்கலடைகிறது.

இதன் விளைவாக ஒரு காலத்தில் சிங்கள அரசியல் தலைவர்கள் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்கு உடன்படவேண்டிய தேவை ஏற்பட்டாலும், அதை ஏற்றுக்கொண்டு - ஒத்துழைப்பு வழங்கும் மனநிலையில் சிங்கள மக்கள் இருக்கமாட்டார்கள் சிறீலங்கா அரசைப் பொறுத்தவரை, எதிர்காலத்தில் இது ஒரு ஆபத்தான விடயமாக இருக்கும்.

போர்க்கள யதார்த்தத்தைப்பற்றியும், இன ஒற்றுமையின் அவசியமபற்றியும், தமிழர்களது உரிமைப் போராட்டத்தின் அரசியல் நியாயத்தையும் மெதுமெதுவாக சிங்கள மக்களுக்கு ஊட்டுவதற்குப் பதிலாக, சிங்கள அரசியல் தலைவர்களுடன் சேர்ந்து மக்கள் தொடர்புச்சாதனங்களும், பௌத்த மத துறவிகளும், புத்திஜீவிகளும் ''புலிகள் அழிக்கப்பட வேண்டும்; போராட்டம் ஒடுக்கப்படவேண்டும்; அதில்தான் சிங்கள இனத்தின் வாழ்வே தங்கியுள்ளது'' என்றவாறாக, சிங்கள மக்களுக்கு வெறியூட்டிக்கொண்டிருக்கின்றனர்.

இந்த தமிழின விரோதப் பிரச்சாரத்தால் தமிழ்மக்கள் விரக்தியும் - ஏமாற்றமும் - கோபமும் அடைந்துள்ளனர்.

சிங்கள ஆளும்வர்க்கத்தைப் பொறுத்தளவில் தமிழர்களுக்கு உரிமை வழங்கவும் தயாரில்லை; தமிழர்களுடன் இணைந்து வாழவும் விரும்பவில்லை. இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் - குறிப்பாக தென்தமிழீழத்தில் - இன்றும் தொடர்ந்தபடியுள்ள இனப்படுகொலையும், சிங்களக் குடியேற்றங்களும், கொடூரமான அடாவடித்தனங்களும் இதற்கு நல்ல சான்றுகள்.

சிங்கள தேசத்து அரசியல் நிலைப்பாடு இவ்விதம் இருக்கும்பொழுது, இவற்றையெல்லாம் மீறிக்கொண்டு சமாதானத்திற்கு அரசு இசைந்துவிடுமென்று தமிழ்மக்கள் எதிர்பார்ப்பதில், எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை.

தொடர்ந்தும் தமிழினத்தின் தேசிய பலம் வளர்ச்சியடையவேண்டும். அதுதான் தமிழ்மக்களுக்கு சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கும். ○

# பேரினவாதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது நிலையிலுள்ள தளபதியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம வலியுறுத்திக் கூறியுள்ளார். இவருடைய கூற்றை மேலும் உறுதிப்படுத்துவதுபோல், சிங்கள அரசு கொள்வனவு செய்ய இருக்கும் படைக்கலன்கள் பற்றிய செய்திகளும் அமைந்துள்ளன.

சீனாவிடமிருந்து 500கோடி ரூபா பெறுமானமுள்ள பீரங்கிகள் - மோட்டார்கள் - எறிகணைகள் மற்றும் இராணுவ தளபாடங்களை அரசு கொள்வனவு செய்துள்ளது.

அதேவேளை, கடற்படைக்குத் தேவையான அதிவேக சண்டைப் படகுகளை பிரான்ஸ் நாட்டிலிருந்து அரசு கொள்வனவு செய்ய இருக்கின்றது என்ற தகவலும், ஆகாயப்படைக்குத் தேவையான எம். ஐ. 8 ரக உலங்குவானூர்திகளை ரஷ்ய தேசத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்காக, ஒரு குழு அங்கே சென்றிருக்கின்றது என்ற செய்தியும், தரைப்படைக்கு விசேட போர்ப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்ற செய்திகளும் அரசின் போர்த் தயாரிப்பைப் புலப்படுத்துகின்றன.

இதேவேளை, வடதமிழீழப் போர் முனையில் படுகாயமடையும் படையினர்க்குச் சிகிச்சை அளித்துவரும் அனுராதபுர வைத்தியசாலைக்கு, திடீரென சத்திரசிகிச்சை நிபுணர்கள் உட்பட 42 வைத்திய நிபுணர்களை அரசு அனுப்பிவைத்துள்ளது என்று, கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவை, ஒரு பெரும் படையெடுப்பிற்கான முன்னேற்பாடுகளேயன்றி வேறொன்றுமல்ல.

இராணுவ சிந்தையுடைய விஜேதுங்கா அரசைப் பொறுத்தவரை, அடுத்தகட்டப் போரைத் தீவிரமாக நடாத்துவதற்கு, உள்ளூராட்சித் தேர்தல் அதற்குத் தேவைப்படுகின்றது. அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலைவெல்வதற்காக, அதற்குப் பெரும்போர் தேவைப்படுகின்றது. முடிவாக விஜேதுங்கா அரசுக்கு, சமாதானமல்ல போரே அவசியமாகத் தேவைப்படுகின்றது. அதனால்தான், யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் மேற்கொண்டுவிட்டு புலிகளின் சமாதானச் செய்திகளுடன் கொழும்பு திரும்பும் மதகுருக்களை, ஜனாதிபதி சந்திக்காது தட்டிக்கழித்து வருகின்றார்.

ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா வெளிப்படையாகவே கடைப்பிடித்துவரும் பேரினவாத நிலைப்பாட்டால் மகிழ்ச்சியடைந்துள்ள சிங்கள இனவாதிகள் அனைவரும், ஜனாதிபதியின் அரசியல் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்துப் பேரினவாதத்தின் கையைப் பலப்படுத்தி வருகின்றனர்.

இதன் முக்கிய கட்டமாக யாழ். நூல்நிலைய எரிப்பு புகழ் காமினி திசநாயக்காவும் டி. பியுடன் இணைந்துள்ளார். இதைச் சாதாரண ஒரு கட்சிமாறலாக அல்லது அரசியல்வாதிகளின் வழமையான வேலையாக மட்டும் எடுத்துவிடக் கூடாது.

தனித்தனியாகச் சிதறுண்டிருந்த இனவாதக்குழுக்களும் - பௌத்த பிக்குகளும் மற்றும் சக்திமிக்க இனவாத அரசியல்வாதிகளும் ஒன்றாக இணைந்து வருவதை, தமிழினம் உன்னிப்பாக அவதானிக்கவேண்டும். இந்த இனவாதிகளது இணைவின் பின்னால் தனிமனித அரசியல் இலாபங்கள் இருந்த பொழுதிலும், தமிழினத்தின் உரிமைப் போருக்கு இது பெரும் சவாலாகஅமையும் என்பதையும், மறுக்க முடியாது. அத்துடன், இனவாதிகளின் இத்தகைய இணைவை இந்திய அரசும் மறைமுகமாக ஊக்குவிக்கின்றது.

காமினி திசநாயக்கா ஒரு இந்தியதாசர் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. காமினி ஐ. தே. கட்சியில்இணைந்ததமையும், டி. பி. - காமினி கூட்டாக இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருக்கின்றனர் என்ற பத்திரிகைச் செய்தியும், மேற்குறித்த கருத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

சிங்கள தேசத்தின் படைபலம் முழுவதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக ஒருங்குதிரட்டப்பட்டிருப்பதுபோல இப்போது, போரைத் தீவிரமாக ஆதரிக்கும் சிங்கள அரசியல் சக்திகளும் ஒன்றிணைந்து வருகின்றன.

இந்த ஆண்டு ஒரு பெரும் போராண்டாகவே இருக்கப் போகின்றது என்ற ஊகம், முற்றுமுழுதான உண்மையாக மாறிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. ○

# போரும் சமாதானமும்



ஆயர் கெனத் பெர்னாண்டோவுடன் தலைவர்.

**தமிழீழம் சமாதானத்தை வரவேற்கின்றது. நாங்கள் நீட்டிநிற்கும் நேசக்கரத்தைப் பற்றிக்கொள்ள சிங்கள அரசு மறுக்கின்றது.**

நீண்ட காலமாகவே தமிழீழத்தின் சமாதானக் கதவுகள் திறந்துவைக்கப்பட்டிருக்கின்றன. சமாதானத் தூதுவர்கள் எவராக இருப்பினும், எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், இங்கு வந்துசெல்ல வாய்ப்பளிக்கும் வகையில் அமைதியின் பாதையை அகலத் திறந்துவிட்டிருக்கிறார் தலைவர் பிரபாகரன்.

இந்தச் சமாதானக் கதவுகளூடாக பலர் பல தடவைகள் இங்கு வந்து சென்றிருக்கிறார்கள்; புலிகளின் சமாதானச் செய்தியை தென்னிலங்கைக்குக் கொண்டுசென்றிருக்கிறார்கள். ஆனால் சிங்கள தேசம் இதுவரை சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட மறுத்து வருகிறது; சண்டையை நிறுத்தி, சமாதான சூழ்நிலையை உருவாக்க பின்னடித்து வருகிறது.

புலிகளின் சமாதானக் கதவுகளூடாக முதன்முதலாக நுழைந்தது நோர்வே அரசாங்கமாகும். 1990 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஒரு உயர் அதிகாரி யாழ்ப்பாணம் வந்தார்; எம்முடன் பேச்சுக்களை நடத்தினார்; சர்வதேச சமூகம் சமாதானப் பேச்சுக்களை விரும்புவதாகக் கூறினார். நோர்வே மத்தியத்துவம் வகிக்க விரும்புகிறது; நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவில் பேச்சுக்களை ஒழுங்குசெய்யலாம்; சமாதானப் பேச்சுக்களுக்கு முதற்படியாக இரு தரப்பினரும் போர்நிறுத்தம் செய்யவேண்டும், என வலியுறுத்தினார். நாம் அதற்கு இணக்கம் தெரிவித்தோம். ''உண்மையில் நீங்கள் சமாதானத்தை விரும்புவதாக உலகத்திற்கு நிரூபித்துக் காட்டவேண்டும் என்றால், நீங்கள்தான் முதலில் போர்நிறுத்தம் செய்யவேண்டும். ஒருதலைப்பட்சமாகப் பிரகடனப்படுத்தவேண்டும். நீங்கள் அப்படிச் செய்தால், சிறீலங்கா அரசு மீது நாம் அழுத்தத்தைப் பிரயோகித்து அவர்களையும் போர்நிறுத்தத்திற்கு இணங்க வைக்கலாம்'' என்றார். நாம் அதற்கும் இணக்கம் தெரிவித்தோம்.

1991 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து போர்நிறுத்தம் கடைப்பிடிப்பதாக, விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. ஆனால் சிங்கள அரசு போர்நிறுத்தத்தை நிராகரித்தது; யுத்தத்தை மேலும் தீவிரமாகத் தொடர்ந்தது. ஒன்றும் தெரியாதது போல நோர்வே அரசாங்கம் மௌனம் சாதித்தது. அந்த ஆண்டு மேற்குலகம் அதிகப்படியான உதவியை சிறீலங்காவுக்கு வாரி வழங்கியது.

அடுத்ததாக, புலிகளின் சமாதானக் கதவுகளூடாக குவேக்கர்ஸ் நல்லெண்ணக் குழு பிரவேசித்தது. பல தடவைகள் வந்துசென்றது. பிரிட்டனின் ஆசியுடன் லண்டனில் பேச்சுக்களை நடத்தலாம் என்று சொன்னது. கிட்டுவுடன் சேர்ந்து ஒரு விரிவான சமாதானத் திட்டத்தைத் தயாரிப்பதாகக் கூறியது. உபகண்டமூடாக போக்குவரத்துச்செய்ய இந்தியாவும் இணங்குவதாகத் தெரிவித்தது. எல்லாவகையிலும் ஒத்துழைப்பு வழங்க நாமும் ஒப்புதல் கொடுத்தோம். இறுதியில் என்ன நடந்தது? 'குவேக்கர்ஸின்' சமாதான முயற்சி, முடிவில் கிட்டுவின் உயிரை அநியாயமாகப் பலிகொண்டது. இந்தத் துயரமான கதைபற்றி நாம் ஏற்கெனவே விளக்கியிருக்கிறோம். வங்கக் கடலில் வைத்து புலிகளின் சமாதானப் படகு இந்தியாவால் மூழ்கடிக்கப்பட்டபோது, பிரிட்டனோ அல்லது மேற்குலகமோ வாய் திறக்கவில்லை. சமாதானத் தூதுவனாகவே கிட்டு தமிழீழம்நோக்கி பயணம் செய்தார் என குவேக்கர்ஸ் நிறுவனம் வெளியிட்ட ஆட்சேப அறிக்கையையும், உலகம் இருட்டடிப்புச் செய்தது.

இது ஒருபுறமிருக்க, 1992 ஆம் ஆண்டு ஏப்ரில் 22ஆம் திகதி பௌத்த பிக்குகள் அடங்கிய சமாதானக் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்தது. இக்குழுவிற்கு அமரபுர பௌத்த பீடத்தைச் சேர்ந்த வண. சித்தாதிய மகா நாயக்க தேரர் தலைமை வகித்தார். இவர்கள் புலிகளின் பாதுகாப்புடன் யாழ். குடாநாடு முழுவதும் சுற்றிப் பார்த்தனர். தமிழ் மக்களின் அபிலாசைகளைக் கேட்டறிந்தனர். யுத்த அநர்த்தங்களைக் கண்டறிந்தனர். மக்களின் அவலநிலைகண்டு அதிர்ந்துபோன இவர்கள், போருக்கு முடிவுகட்டி சமாதான சூழலை உருவாக்க தம்மாலான முயற்சி செய்வோம் என வாக்குறுதிகள் அளித்தனர். இந்தப் பௌத்த சமாதானக் குழுவினர் சில யோசனைகள் அடங்கிய திட்டத்தோடு வந்திருந்தனர். இத்திட்டத்தில் தமிழர் தாயகக் கோட்பாடு நிராகரிக்கப்பட்டிருந்தது. நாம் இவர்களைச் சந்தித்துப் பேசினோம். எந்தத் தீர்வுக்கும் 'தமிழர் தாயகம்' அடிப்படையானது என வலியுறுத்தினோம். பேச்சுக்களுக்கு சமாதான சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியம் எனவும் எடுத்துரைத்தோம். சிங்கள அரசியல் தலைமையுடன் பேச்சுக்களை நடத்தி, சமாதான சூழலை உருவாக்குவோம்; புதிய தீர்வுத் திட்டத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் வருவோம், என்று சொன்னார்கள். ஆனால் போனவர்கள் வரவில்லை. கொழும்பு திரும்பிய இவர்களை ஆட்சிபீடத்திலிருந்த சிங்களத் தலைவர்கள் எவரும் சந்திக்க விரும்பவில்லை. இதனால் இவர்களது சமாதான முயற்சி பிசுபிசுத்துப்போனது.

இந்த நிகழ்வுகளுக்கு அப்புறமும் சமாதானக் கதவுகளைப் புலிகள் சாத்திவிடவில்லை.

அடுத்ததாக, சென்ற ஆண்டு முற்பகுதியில் அக்கிளிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வந்தார். சமாதானத்தின் பருவகாலம் வந்துவிட்டது என்றார். புலிகளின் தலைவரை நேரில் சந்திக்கவேண்டும்; அவரது வாயால், அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டறியவே சிங்கள தேசம் விரும்புகிறது; ஏனையோரைச் சந்திப்பதில் அர்த்தமுமில்லை, அவசியமும் இல்லை என்றார். ஆயரின் அபிலாசையையும் வற்புறுத்தலையும் நாம் தலைவரிடம் எடுத்துரைத்தோம். ஆயரைச் சந்திக்க தலைவர் இசைந்தார். 1993 ஜனவரி 10 ஆம் திகதி, சந்திப்பு நிகழ்ந்தது. இரண்டரை மணி நேரமாக தலைவர் பிரபாகரன் ஆயருடன் கலந்துரையாடல் நிகழ்த்தினார்; எல்லா விடயங்கள் பற்றியும் மனம் திறந்து பேசினார்.

தமிழீழம் சமாதானத்தை வரவேற்கிறது. அமைதி வழியில் பிரச்சினையைத் தீர்க்க நாம் தயார். சிங்கள தேசத்திற்கு நாம் நேசக் கரம் நீட்டி நிற்கிறோம். ஆனால் அதைப் பற்றிக்கொள்ள சிங்கள அரசு மறுக்கிறது. சண்டையை நிறுத்தி, பொருளாதாரத் தடைகளை நீக்கி சகஜ நிலையைத் தோற்றுவித்தால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். இப்படிச் சொன்னார் தலைவர்.

தமிழர் தாயகத்தைத் துண்டாடிவிடும் சிங்கள அரசின் முயற்சியையும் தலைவர் கண்டித்தார். தமிழர் தாயகம் என்பது எமது அடிப்படையான கோரிக்கை. அதனை சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியாது என்பதனையும், தலைவர் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

'' நீங்கள் உண்மையில் சமாதானத்தை விரும்புவதாக இருந்தால், உங்கள் நல்லெண்ணத்திற்குச் சான்றாக இரு போர்க்கைதிகளை விடுதலை செய்து என்னிடம் ஒப்படைப்பீர்களா?'' என்று கேட்டார் ஆயர். எவ்வித தயக்கமுமின்றி தலைவர் பிரபாகரன் அதற்கு இணங்கினார். ஆச்சரியத்தால் ஆயரின் முகம் மலர்ந்தது.

போருக்கு ஒரு முடிவு கொண்டுவர முயற்சிப்பேன். பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள் படும் தாங்கொணாத்துயரைத் தென்னிலங்கையில் எடுத்து விளக்குவேன். சமாதான சூழலை உருவாக்கும்படி அரசிடம் வற்புறுத்துவேன். இவ்விதம் வாக்குறுதி அளித்தார் ஆயர்.

தலைவர் பிரபாகரனின் நேர்மைக்கு அறிகுறியாகவும், புலிகளின் சமாதானத் தேடுதலுக்கு சாட்சியாகவும், விடுதலைபெற்ற இரு போர்க்கைதிகளை அழைத்துக்கொண்டு ஆயர் கெனத் பெர்னாண்டோ கொழும்பு திரும்பினார். கொழும்பில் பத்திரிகையாளரிடம் பேசும் பொழுது, ''பிரபாகரனிடம் மனிதத்தின் முகத்தைக் கண்டேன்'' என்று கூறினார். அவ்வளவுதான், சிங்களப்பேரினவாதம் கொதித்து எழுந்தது; ஆயர்மீதும் புலிகள்மீதும் சேற்றை வாரி வீசியது. ''ஆயரிற்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. அதனால்தான் பிரபாகரனை மனிதனாகக் கண்டார்'' என ஒரு பத்திரிகை எழுதியது.

அன்ரன் பாலசிங்கம்

ஆயர் எவ்வளவோ முயற்சித்தும், அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார்.

சிங்களப் பேரினவாதம் சமாதானத்தை விரும்பாததால், மீண்டும் ஓராண்டு யுத்தத்தில் கழிந்தது. என்றுமில்லாதவாறு இராணுவத்திற்கு 'அடிமேல் அடிவிழுந்தது பூநகரியில் பேரடி விழுந்தது.' அடிமேல் அடி விழுந்தால் அம்மியும் நகரும், என்பார்கள். ஆனால் சிங்களப் பேரினவாத அம்மி சிறிதேனும் நகரவில்லை.

வழமைபோல, வருட ஆரம்பத்தில் சமாதானப் பருவகாலம் பிறந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தை நோக்கிய ஆன்மீக யாத்திரைகளும் தொடங்கின. இம்முறை கிறீஸ்தவத்தின் மூன்று முக்கிய மதபீடத் தலைமைகளும் இங்கு வந்து, நிலைமையைக் கண்டறிந்து சென்றன. இவர்களைத் தொடர்ந்து, பௌத்த மகா சங்கத்தின் பிக்குகள் குழு ஒன்றும் யுத்தத்தால் சிதைந்த யாழ்ப்பாணத்தின் முகத்தைத் தரிசித்துச்செல்ல இருக்கிறது.

கத்தோலிக்க, மெதடிஸ்த, அங்கிளிக்கன் திருச்சபைத் தலைவர்களை நாம் சந்தித்து எமது நிலைப்பாட்டை விளக்கினோம்.

**வந்தவர்கள் திரும்பிவிட்டார்கள். அவர்கள் புதிதாக எதையும் கொண்டு வரவுமில்லை; புதிதாக எதையும் கொண்டுசெல்லவுமில்லை. தமிழ்மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள்; புலிகளும் சமாதானத்தையே விரும்புகின்றார்கள். இந்தப் பழைய செய்தியைத்தான் கொண்டுசென்றுள்ளார்கள். கொழும்பிலுள்ள அரசியற் செவிடர்களுக்கு இங்கிருந்து எத்தனை தடவைகள் சங்கை ஊதினாலும் கேட்கவா போகின்றது?**

சமாதானப் பேச்சுக்கள் சமாதான சூழ்நிலையில் நிகழ்வதுதான் நியாயம். அப்பொழுதுதான் அது வலுக்கட்டாயமற்ற, சுதந்திரமான பேச்சாக அமையும். இராணுவ, பொருளாதார அழுத்தங்களைப் போட்டவாறு, தமிழரின் தொண்டையை நெரித்துக்கொண்டு பேசச்சொல்வது நியாயம் ஆகாது. நெருக்குவாரத்தின் பிடிக்குள் நின்றுகொண்டு, நட்புறவுடன், நல்லெண்ணத்துடன், நம்பிக்கையுடன் பேச முடியாது. எனவே, அழுத்தம்போட்டு, மிரட்டிப் பயமுறுத்தி, தமிழர்மீது ஏதோ தீர்வு ஒன்றைத் திணித்துவிடலாம் என்று அரசு எண்ணுவது அடிப்படையிலேயே தவறானது முதற்படியாக சமாதான சூழ்நிலை உருவாகவேண்டும். இதற்கு போர்நிறுத்தம் அவசியம்; பொருளாதார நெருக்குதல் நீக்கப்படுவது அவசியம். தமிழர்மீது தனது நல்லெண்ணத்தைக் காண்பிக்கும் வகையில் அரசு இவற்றைச் செய்யலாம். இப்படியாக ஒரு சமாதான சூழ்நிலை பிறப்பிக்கப்பட்டால் நாம் பேச்சுக்களுக்குத் தயார். இவ்வாறு நாம் எமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கினோம். எமது யோசனையில் நியாயம் இருப்பதை ஆயர்களும் உணர்ந்துகொண்டனர்.

அங்கிளிக்கன் ஆயர், தலைவர் பிரபாகரனை மீண்டும் சந்திக்க விருப்பம் தெரிவித்தார்;

(7 ஆம் பக்கம் பார்க்க)

# துளிர்க்கும் சந்ததிக்காக......

யாழ். பொம்மைவெளியில், கடந்த வருடம் தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பித்துவைக்கப்பட்ட முதலாவது சிறுவர் போசாக்குப் பூங்கா, இன்றைய தைப்பொங்கல் தினத்தன்று தனது ஒருவயதுப் பூர்த்தியைக் கொண்டாடியது.

சிறுவர் போசாக்குப் பூங்கா என்பது என்ன? இதுஎன்ன நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது? இதன் செயற்பாடு யாது?

தாயக விடுதலைப் போராட்டம் முனைப்புற்று - வீறுடன் வளர்ந்துவரும் இன்றைய காலகட்டத்தில், அதனை மழுங்கடித்து - அழித்துவிடுவதற்கான அனைத்து வழிமுறைகளையும் சிங்கள அரசு கையாண்டு வருகின்றது. மிக நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டதன் அடிப்படையில், பன்முகப்பட்ட வடிவங்களில், சிங்கள இனவாதச் சிந்தனை எடுத்துவரும் இந்த அழிப்பு நடவடிக்கை, எமது மக்களைப் பல்வேறு வகைகளிலும் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது. குண்டு வீச்சுக்களாக, இராணுவப் படையெடுப்புகளாக, பொருளாதாரத் தடையாக, கல்விச் சிர்குலைவாக, பண்பாட்டு அழிப்பாக, நில ஆக்கிரமிப்பாக, உளவியல் தாக்கங்களாக, இவைஎல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தது போன்று நேரடியான இனப் படுகொலையாக - தமிழ்த் தேசிய இனத்திற்கெதிரான சிங்கள அரசின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் பொருளாதாரத் தடையானது பல்வேறு கூறுகளைக் கொண்டதாக அமுல்படுத்தப்படுகின்றது. அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தடை, எரிபொருட்களுக்கான தடை, மருத்துவப் பொருட்களுக்கான தடை, தொழில் மூலப்பொருட்களுக்கான தடை, மீன்பிடிக்கத் தடை என நீளும் இந்தத் தடைப்பட்டியலில் - உடல்வளர்ச்சிக்கான போசாக்கு - சத்துணவு - வகைகளுக்கான தடையும் முக்கிய இடம் பெறுகின்றது.

இதன் நோக்கங்களில் ஒன்று, பலவீனமான ஒரு இளம் பரம்பரையைத் தமிழீழத்தில் உருவாக்கிவிடுவதுதான்.

இன்றைய காலந்தில், மிகப் பெருந்தொகையான குடும்பங்கள் உழைக்கும் வழிகளை இழந்து, குடும்பத்தின் உழைப்பாளர்களை இழந்து, உழைப்புத் தளங்களை இழந்து அன்றாட வாழ்வுக்கே அல்லல்படும் அவல நிலையில் வாழ்கின்றன. இக் குடும்பங்களினால் தங்களது குழந்தைகளை ஆரோக்கியமாகவும் - அறிவுபூர்வமாகவும் வளர்த்தெடுக்க முடியாது போய்விடுகின்றது.

இத்தகைய சூழ்நிலையிலேயே, தமிழீழ தேசத்தின் இளம் பரம்பரையை ஒழுங்கான முறையில் வளர்த்து, மேம்பாடடையச் செய்ய வேண்டிய அவசியம்பற்றி, தலைவர் அவர்கள் சிந்தித்தார்கள். குறிப்பாக, பின்தங்கிய கிராமப் பகுதிகளைச் சேர்ந்த - நிலையானதும் உறுதியானதுமான பொருளாதார அடித்தளமில்லாத - வசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள், முறையாகச் சத்துணவூட்டப்பட்டு வளர்க்கப்பட முடியாத சூழலில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததை, அவர் உணர்ந்தார். அதன் பின்னரே அவரது பணிப்பின் கீழ் இந்தச் சிறுவர் போசாக்குப் பூங்கா என்ற குழந்தைகள் பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டன.

சிறுவர்களின் உடல்நலத்தை மேம்படுத்துவதற்கான ஊட்டச்சத்துள்ள உணவு வகைகளை வழங்குவது மட்டுமே, இப் பூங்காக்களின் அடிப்படையான நோக்கமல்ல; அவற்றின் சேவை அதோடு மட்டும் குறுகிவிடவுமில்லை. உடற்பயிற்சிகள்மூலம் நோய்களற்ற தேகாரோக்கியமான வாழ்விற்கு அத்திவாரமிடுவது, அடிப்படையான கல்வி அறிவையும் பொது அறிவையும் ஊட்டுவது, நல்லொழுக்கம் மிக்க பிரஜைகளாக அவர்கள் வளர்வதற்கான அடித்தளமிடுவது எனப் பல அரிய நோக்கங்கள் அவற்றிற்குண்டு.

அந்த வகையில் உருவாக்கப்பட்ட இந்தச் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், முதற் கட்டமாக குடாநாட்டுக்குள்ளேயே அமைக்கப்பட்டு வருகின்றன. சிரிய ஒரு நோக்கத்தைக்கொண்ட இந்தச் செயற்திட்டமானது படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு, நாட்டின் ஏனைய மாவட்டங்களுக்கும் தனது சேவையை ஆற்றும்.

சுகாதாரத்திணைக்களத்தின் அநுசரணையுடன், கோட்ட அரசியல் பொறுப்பாளர்கள் சிபார்சு செய்கின்ற பின்தங்கிய கிராமங்களில் நிறுவப்படுகின்ற இப் பூங்காக்களுக்கு, வீடுதோறும் சென்று சேகரிக்கும் விபரங்களின் பேரில் குழந்தைகள் அழைக்கப்படுகின்றார்கள்.

கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அந்தந்தக் கிராமங்களைச் சேர்ந்த பராமரிப்பாளர்கள், போதிய காலப் பயிற்சியின் பின் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். பணியாற்றும் காலத்திலும் மாதாந்தப் பயிற்சி வகுப்புகள்மூலம் அவர்களுக்குப் போதனைகள் வழங்கப்படும். அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு ஊதியம் வழங்கப்படுகின்றதாயினும், சேவை மனப்பாங்குகொண்டவர்களாலேயே சிறு குழந்தைகளைப் பராமரிக்க முடியும் என்பது சொல்லாமலே புரிந்து கொள்ளக் கூடியது.

ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 7மணிக்கே இப் பூங்காக்களில் கொண்டுவந்து விடப்படுகின்ற மழலைகள், மாலையில் மீண்டும் அம்மாவோடு சேர்ந்துகொள்கின்றனர். 2 வயது முதல் 5வயது வரை இங்கே புடமிடப்படும் குழந்தையை, அதன்பிறகு எவ்விதமான அணுகுமுறைகளுக்கூடாக வளர்த்தெடுக்க வேண்டுமென்பதுகூட, மாதமிருமுறை நடக்கும் கட்டாய வகுப்புகள்மூலம் பெற்றோருக்கு அறிவுறுத்தப்படுகின்றது. இந்தப் பூங்காக்களுக்கு வரும் சின்னப்பூக்கள் வளர்த்தெடுக்கப்படுகின்ற முறை சிறப்பானது. நல்லொழுக்கமும் நற்பண்புகளும் அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. கூடத்திற்குள் நுழைகின்றவரைப் பார்த்து, ''வணக்கம் மாமா'' என கைகூப்பி வரவேற்பதிலிருந்து, திரும்பிச் செல்லும்போது ''நன்றி மாமா'' என வழியனுப்பி வைப்பதுவரை, வாழ்க்கைப் பண்புகள் கற்பிக்கப்படுகின்றன. நேர்மையான உண்மையான வாழ்வுமுறைக்கு அவர்கள் நெறிப்படுத்தப்படுகின்றார்கள். அறிவு வளர்ச்சிக்கு அடித்தளம் இடும் ஆரம்பக்கல்வி போதிக்கப்படுகின்றது. வயதுரீதியாகப் பிரிக்கப்பட்டு, வகுப்புகள் வாரியாகப் பாடங்கள் நடைபெறுகின்றன. உடல்நலத்திற்குத் தேவையான உடற்பயிற்சியும், ஓய்வு உறக்கமும் வழங்கப்படுகின்றன. சின்னவர்கள் எடுத்ததுக்கெல்லாம் சண்டையிடுகின்றபோது, ஒற்றுமை வலியுறுத்தப்படுகின்றது. புரிந்துணர்வின் அவசியமும், ஐக்கியத்தின் பலமும் ஆறஅமர எடுத்துரைக்கப்படுகின்றன. அங்கே சுகாதாரம் பேணப்படும் முறை மிகவும் சிறப்பாயுள்ளது. ஒவ்வொரு குழந்தையையும் நாளாந்தம் குளிக்க வார்த்து, அவர்களது உடைகள் துவைக்கப்படுகின்றன. வாரரீதியாக வரையறுக்கப்பட்ட உணவு வகையானது - 'கலோரி'ப் பெறுமானங்களின் அடிப்படையில் ஏழு நாட்களுக்கும் பிரிக்கப்பட்டு - ஒழுங்கமைக்கப்பட்ட வரன்முறையில் வழங்கப்படுகின்றன. இவையெல்லாம் குழந்தை நலவியல்துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனையின்கீழ் தயாரிக்கப்பட்ட நேர அட்டவணைகளின் வழிமுறையில், தினமும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மாதமொரு முறை குழந்தைகளின் உடல் நிலையைப் பரிசோதிக்கும் மருத்துவ நிபுணர், உடல்நல மேம்பாட்டைக் கண்காணிப்பார். அவரும், எமதியக்கத்தின் சுகாதாரப் பிரிவும் சமர்ப்பிக்கும் அறிக்கைகளின்படி உடன் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



நம்பிக்கையுடன் ஒரு சிறுவன்

சிறுவர்கள் தமது எதிர்காலத்திற்காக அத்திவாரமிடத் தெரியாதவர்கள்; தமது முன்னேற்றங்களைப் பற்றியோ, வளர்ச்சிகளைப்பற்றியோ சிந்திக்கும் ஆற்றல் அற்றவர்கள்; நோயின்மையைப்பற்றி, உடல்நலனைப்பற்றி, கல்வி அறிவு பற்றி ஒழுக்கப்பண்புகள்பற்றி, அக்கறைப்படத் தெரியாதவர்கள். அவர்களைச் சரியானமுறையில் வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு, பெரியவர்களாகிய எங்களைச் சார்ந்தது. எமது தேசத்தின் இளம் சந்ததியை ஆரோக்கியமான நற்பிரசைகளாக உருவாக்கவேண்டிய கடப்பாடு, எமது சமூகத்தின் கைகளில் உண்டு. தனது அடிப்படையான கடமைகளில் ஒன்றான இதனைச் செய்ய, எமது சமூகம் ஊக்குவிக்கப்படவேண்டும். அதற்கு முன்மாதிரியாக நடந்து, முன்னுதாரணமாகச் செயற்பட்டு, எங்கள் இயக்கம் இந்நடவடிக்கையைச் செய்யும்போது, கால ஓட்டத்தில் இந்தப் பணியோடு மக்கள் தம்மை இணைத்துக்கொள்ளுவார்கள் என்பது, தலைவர் அவர்களின் கருத்தாகும்.

தற்போது யாழ். மாவட்டத்தில், ஒன்பது இடங்களில் இப் பூங்காக்கள் இயங்கிவருகின்றன. இந்நிலையங்களில் ஏறக்குறைய 1000 வரையான குழந்தைகள் பேணப்படுகின்றார்கள். இத்தொகை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இத்தகைய நிலையங்களின் வளர்ச்சிக்காக அளப்பரிய உதவிகளை மனமுவந்து செய்துவரும் பொது நிலையங்களுக்கும், தனியார்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியறிதலைக் கூறிக்கொண்டு, தொடர்ந்தும் அவர்களுடைய ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றோம்.

## அன்றும் இன்றும்

அன்று -

'பெண்பிள்ளை சிரிச்சால் போச்சு' என்பது முதுமொழி!

அப்பாடா! அதன்பின் எவ்வளவு மாற்றங்கள்! உடைத்தெறிப்புக்கள்! சாதனையிற் சாதனைகள்!

கடந்த 11.11.1993 ஆம் தேதி இரவு பூநகரி நாகதேவன் துறையில் எதிரியின் அரண்களை அழித்துவிட்டு, அங்கு அதிகாலை காவற்பணியில் அணியாக நிற்கின்றனர் பெண் போராளிகள்!

ஒரு அபிமானப் பொதுமகன் வருகிறார். நடுவயதைத் தாண்டியவர். பெண் போராளிகளை வியந்து பார்க்கிறார்.

''நல்லது. நீங்கள் காவல் செய்கிறீர்களா? அதுசரி, இரவு ஆமிக்காரன்களை அடிச்சு விரட்டிய உங்க அண்ணாமார் எங்கை, பிள்ளையள்?'' என வினவுகிறார்.

''ஐயா, இரவு அவன்களை அடிச்சு விரட்டியதும் நாங்கள்தான்!''

''என்ன? இரவு நிண்டு அவன்களை அடிச்சு-விரட்டியதும் நீங்களோ? பெண்பிள்ளைகளோ?''

நம்புவது கடினம்தான்! அந்த அன்பரின் புருவங்கள் வியப்பால் மேலேறுகின்றன!

அதில், பழைய கருத்துக்கள் 'அன்றாகி' அழிந்து மறைகின்றன! புதுயுகமாகிய 'இன்று' பிறக்கிறது!

(உண்மை நிகழ்விலிருந்து)

# முறியடிக்கப்பட்ட முற்றுகை

## குடாநாடுமீதான முற்றுகைப் போர் - ஒரு நோக்கு

ஈழப்போர் - 2 தொடங்கு முன்னரே, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக ஒரு புதிய போர்முறைத் திட்டமொன்றைச் சிங்கள அரசு வரைந்து வைத்திருந்தது.

யாழ்.குடாநாடுமீதான பூரண இராணுவ - பொருளாதார முற்றுகைப் போர்முறையே அதுவாகும்.

குடாநாட்டின் பத்து இலட்சம் மக்களையும் குடாநாட்டுக்குள்ளே சிறைவைத்து, அவர்கள்மீது தீவிரமானதொரு போரைத் தொடுத்து, குடாநாட்டைச் சிங்களப்படைகளிடம் சரணாகதியடையச் செய்வதுதான் அந்த முற்றுகைப் போர்முறைத் திட்டத்தின் நோக்கம்.

குடாநாட்டைச் சரணாகதியடையச் செய்தால், தண்டவாளம் இல்லாத புகைவண்டிபோல தமிழீழ விடுதலைப் போராட்டம் செயலிழந்துவிடும் என்று, சிங்களத் தலைவர்கள் நம்பினர். அந்தளவுக்கு குடாநாட்டை விடுதலைப் போராட்டத்தின் உந்துதளமாகவும் - மையவிசையாகவும் கருதினர்.

ஆனால், 1990 யூன் 10ஆம் திகதி போர் தொடங்கியபோது, தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலான முறையில் புலிகள் இயக்கம் தொடுத்த அதிரடிகள் - முகாம் தகர்ப்புகளால் திகிலடைந்த சிங்களப் படைத்துறை, உடனடியாக குடாநாடு மீதான முற்றுகைப் போரைத் தொடுக்க முடியவில்லை.

ஏற்கெனவே இருந்த ஆட்பலத்தின்மூலம் குடாநாடுமீதான முற்றுகைப் போரையும் நடாத்திக்கொண்டு, அதேவேளை தமிழீழத்தின் மற்றைய பகுதிகளிலும் தமது இராணுவ நடவடிக்கைகளைத் தொடரமுடியும் என்றே, முன்னர் படைத்துறைத் தலைமை எண்ணியது.

ஆனால், போர் தொடங்கிய பின்னர் புலிகளின் பலத்தைக் கண்டுகொண்ட அரசு, தனது படையின் ஆள் எண்ணிக்கையை அதிகரித்த பின்னர்தான் குடாநாடு மீதான முற்றுகைப் போரைத் தொடுக்கமுடியும் என்று உணர்ந்துகொண்டது.

1990 இன் பிற்பகுதியிலும் 1991 இன் முற்பகுதியிலும் சிங்கள அரசு, பெரும் எண்ணிக்கையில் படைக்கு ஆள்திரட்டிப் போர்ப் பயிற்சி கொடுத்தது.


1991 யூலை ஆனையிறவுச் சமரைத் தொடர்ந்து, சிங்கள அரசு தனது முற்றுகைப் போர்த்திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கியது. ஆனையிறவுச் சமரில் புலிகள் இயக்கம் சந்தித்த பெரும் எண்ணிக்கையிலான உயிரிழப்பால் புலிப்படை பலவீனப்பட்டுவிட்டது என்று எண்ணிக்கொண்டு, முற்றுகைப் போரை ஆர்வத்துடன் ஆரம்பித்தது.

### முற்றுகைப் போரின் முதலாவது கட்டம்

குடாநாடுமீதான முற்றுகைப் போரைச் சுலபப்படுத்துவதற்குரிய முன்நிபந்தனையாக மணலாறு ஆக்கிரமிக்கப்படவேண்டும் என்று, படைத்துறைத் தலைமை கருதியது.அதன்மூலம் வடக்கு - கிழக்கென்று தமிழர் தாயகத்துக்குக் குறுக்கே வேலிபோட்டு, புலிகளின் பலத்தை இருகூறுகளாகச் சிதைத்துப் பலவீனப்படுத்தலாம் என்று நம்பியது.

இதன்காரணமாக முற்றுகைப் போரின் முதலாவது கட்டம், மணலாற்றை ஆக்கிரமிப்பதாகவே இருந்தது.

'ஒப்பரேசன் மின்னல்' என்று சிங்களப் படைகள் பெயரிட்ட அப்படையெடுப்பைத் திரத்துடன் எதிர்த்துநின்ற புலிவீரர்கள், சிங்களப் படைகளின் எண்ணத்தை ஈடேறவிடாது தடுத்துத் திருப்பியனுப்பினர்.



'ஒப்பரேசன் தவளை' சமருக்குப் புறப்பட்ட புலிவீரர்கள் முன் உரைநிகழ்த்தி, அவர்களை வழியனுப்பிவைக்கும் தலைவர்.

**"சென்று வாருங்கள் வென்று வாருங்கள்"**

இவ்விதம் குடாநாடுமீதான முற்றுகைப் போரின் ஆரம்பமே தோல்விகண்டது.

### இரண்டாவது கட்டம்

இப்போது சிங்களப் படைகள் நேரடியாகவே குடாநாடுமீது முற்றுகைப் போரில் இறங்கின. 17. 10. 91 அன்று, காரைநகரிலிருந்து ஞானிமடம் வரை ஒரு படைநகர்த்தலைச் செய்து பூநகரிப்பகுதியை ஆக்கிரமித்து, கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை விழுங்கிக்கொண்டது. புலிகளின் பாரிய எதிர்த்தாக்குதல்கள் ஏதுமில்லாமல் இந்த இராணுவ நடவடிக்கையைச் சிங்களப் படைகள் நிறைவேற்றின.

ஆனையிறவு, மணலாற்றுச் சமர்களின்பின் புலிகள் இயக்கம் புதிய போர் உத்தியைப் புகுத்தியது. பரவலானமுறையில் மின்னல் வேக அதிரடிகளைக்கொண்ட இப்புதிய போருபாயத்தை வரைந்த தலைவர் அவர்கள், அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கினார். இப்போருபாயத்தின் பிரதான நோக்கம், சிங்கள இராணுவ இயந்திரத்திற்கு அடிமேல் அடிகொடுத்து - அதைத் திணறடித்து - குடாநாடு மீதான முற்றுகைப் போருக்குத் தொல்லை கொடுப்பதுதான்.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு - திருக்கோணமலை, மன்னார், மணலாறு, வன்னி என்று சிங்களப் படையணிகள்மீது புலிவீரர்கள் வெற்றிகரமான தாக்குதலைத் தொடுத்தனர்.

ஏறக்குறைய ஓராண்டுகாலம் தொடர்ந்து நடந்த இந்த மின்னல் வேக அதிரடிகளில் 1220 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்; அதேயளவு ஆயுதங்களும் மற்றும் வெடிப்பொருட்களும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டன.

ஆயினும் இப் பேரிழப்புகளுக்கு மத்தியிலும் சிங்களப் படைத்துறைத் தலைமை, முற்றுகைப் போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது.

### மூன்றாவது கட்டம்

கேரதீவு - சங்குப்பிட்டி பாதை மூடப்பட்டபின், கொம்படி - ஊரியான் பாதைமூலம் மக்கள் பயணம் போயினர். 28.06.92 அன்று வெற்றிலைக்கேணியிலிருந்து தொடங்கிய ஒரு இராணுவ நடவடிக்கைமூலம், இப்போக்குவரத்துப் பாதையும் மூடப்பட்டது. இந்த நடவடிக்கையுடன் குடாநாட்டுக்கான அனைத்துத் தரை மார்க்கமும் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இதனால் கிளாலி நீரேரியூடாக மக்களின் பயணம் தொடங்கியது. ஆரம்பத்தில் இந்த நீரேரிப் பயணத்தை அரசு பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை. நினைத்த நேரத்தில் கடற்படையைக்கொண்டு அப்பாதையை மூடிவிடலாம் என்று அரசு நம்பியது. ஆகவே, கொம்படி - ஊரியான் பாதையை மூடிய கையோடு வேறொரு இராணுவ நடவடிக்கையைச் செய்து, குடாநாட்டு முற்றுகையைத் தீவிரமான ஒரு கட்டத்திற்குக் கொண்டு செல்ல முடிவெடுத்தது

### நாலாவது கட்டம்

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் தீவுப்பகுதியிலிருந்து நீரேரியைத்தாண்டி, வலிகாமத்தின் கரையோரப்பகுதியை ஆக்கிரமிப்பதாக இருந்தது. ஏற்கெனவே தீவுப்பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் காரைநகர், அராலித்துறை, மண்டைதீவு ஆகிய இடங்களிலிருந்து படையெடுப்பைத் தொடங்கி யாழ்நகரப்பகுதி உட்பட வலிகாமத்தின் கணிசமான கரையோரப் பகுதியைக் கைப்பற்ற அரசு திட்டமிட்டது.

ஆனால், இப்படையெடுப்பு தொடங்கும் சமயத்தில் 08.08.92 அன்று, அராலித்துறையில் வெடித்த ஒரு கண்ணி, படையெடுப்புத் திட்டத்தையே முறியடித்தது. வடபிராந்தியத்தின் படைதுறைத் தலைமை ஒரு வாகனத்தில் ஏறி படையெடுப்பை நெறிப்படுத்தச்சென்ற சமயத்தில், வேவுப்புலி வீரர்களால் நுட்பமான முறையில் புதைக்கப்பட்ட கண்ணியில் சிக்கி அவர்கள் கொல்லப்பட்டார்கள்.

### ஐந்தாவது கட்டம்

இதைத்தொடர்ந்து அரசின் கவனம், கிளாலி நீரேரிப் பயணத்தின் பக்கம் முழுமையாகத் திரும்பியது.

எச்சரிக்கைகள், குண்டுத்தாக்குதல்கள் , கோரமான படுகொலைகள்மூலம் படகுப் பயணத்தை நிறுத்த அரசு முயன்றது. அதற்கு மாறாக கடற்புலி வீரர்களின் விடாமுயற்சியும் - வீரமும் - தியாகமும் படகுப் பயணத்தை நடாத்திக்கொண்டிருந்தன. ஈழப்போர் - 2 இன் பிரதான பொருதுகளமாக யாழ். நீரேரி மாறியது. நீரேரியில் சிங்களக் கடற்படை வைத்திருந்த இராணுவ மேலாதிக்கத்தைத் தகர்ப்பதற்காக, கடற்புலிகள் தினந்தோறும் கடற்சண்டையில் ஈடுபட்டனர். மெதுமெதுவாகக் கடலில் பலம்பெற்ற கடற்புலிகள் 25. 08. 93 அன்று நடந்த பாரிய கடற்சண்டையுடன், நீரேரியில் தமது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர்.

கடற்கரும்புலிகள் நடாத்திய தாக்குதல்களால் இரண்டு நீருந்து விசைப்படகுகளுடன், நாகதேவன் துறை படகுத்தளத்தின் போரிடும் உறுதியும் (Morale) மூழ்கடிக்கப்பட்டது.

நீரேரியில் கடற்புலிகள் மேலாதிக்கம் பெற்றுவிட்டனர் என்பதைத் தன்னளவில் ஏற்றுக்கொண்ட சிங்களப் படைத்துறைத் தலைமை, நீரேரிப் பயணத்தைத் தடுத்து முற்றுகைப் போரை முழுமைப்படுத்தும் நோக்கில் புதிய திட்டத்தை வரைந்தது.

### ஆறாவது கட்டம்

கிளாலி இறங்குதுறையைக் கைப்பற்றுவதன்மூலம் கடற்புலிகள் நீரேரிமீது வைத்திருந்த கடலாதிக்கத்தைச் செல்லாக்காசாக்க முடியும் என்று, படைத்துறைத் தலைமை எண்ணியது. ஆகவே கிளாலியை ஆக்கிரமிக்க விரும்பி 28. 09. 93 அன்று, ஆனையிறவிலிருந்து படையெடுப்பைத் தொடங்கியது. ஆனால், புலோப்பளையில்வைத்து புலிவீரர்கள் தொடுத்த பெருந்தாக்குதலில் அப்படையணி பேரிழப்பைச் சந்தித்தது. இருந்தாலும் சிங்களப் படையின் கௌரவத்தைக் காப்பதற்காகக் கிளாலிவரை 'வாரோட்டம்' செய்த படையினர், மீண்டும் ஆனையிறவுக்கே திரும்பினர்.

இதனால் படைத்துறைத் தலைமை சிங்களப் பேரினவாதிகளின் கண்டனத்துக்குள்ளானது. இந்தக் கண்டனங்களிலிருந்து தப்புவதற்காக, 'இரண்டாவது யாழ்தேவி' பற்றிப் படைத்துறைத் தலைமை கருத்து வெளியிட்டது.

### ஏழாவது கட்டம்

கிளாலி இறங்குதுறையை மீண்டும் இராணுவம் ஆக்கிரமிக்க இருக்கின்றது என்ற செய்திகளும், நீரேரியை மறுமுனையில் இருந்து கட்டுப்படுத்துவதற்காக ஆனையிறவுத் தளத்தில் கடற்படை, ஒரு படகுத் தளத்தை அமைத்துக்கொண்டிருக்கின்றது என்ற செய்திகளும் கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவந்துகொண்டிருந்தபோது, நீரேரியின் வேட்டை நாயான பூநகரி கூட்டுத்தளம் புலிகளின் 'தவளை'ப் பாய்ச்சலுக்கு உள்ளாகியது.

இதில் ஞானிமடம் - நாகதேவன் துறைக் கடற்படைத்தளம் முற்றாக அழிக்கப்பட்டது. கூட்டுத்தளத்தின் பெரும்பகுதியும் புலிவீரர்களால் வெற்றிகொள்ளப்பட்டது. நாகதேவன் படகுத்துறையிலிருந்து, கடற்புலிகள் ஐந்து நீருந்து விசைப் படகுகளைக் கைப்பற்றினர். இந்த விசைப்படகுகளுடனும், ஞானிமடம் - நாகதேவன்துறை கடற்படைத்தளத்தின் அழிவுடனும் நீரேரியின் 'தனிக்காட்டு ராஜாவாக' கடற்புலிகள் மாறினர்.

குடாநாடுமீதான முற்றுகைப் போரின் ஏழாவது கட்டம் இது. புலிகள் உருவாக்கிய இந்த ஏழாவது கட்டத்துடன், குடாநாடு மீது சிங்கள அரசு விதித்த முற்றுகைப் போர் முடிவுக்கு வந்தது.

புலிகள் தமது இராணுவ பலத்தால் சிங்கள அரசின் இராணுவ முற்றுகையை உடைத்து, வடதமிழீழ மக்களுக்கென ஒருபோக்குவரத்துப் பாதை சமைத்துவிட்டனர்.

இவ்விதம், இரண்டாவது ஈழப் போருக்கென்று சிங்கள அரசு தயாரித்த போர்முறைத் திட்டத்தைப் புலிகள் முறியடித்துவிட்டனர்! ○

# தவளைத் தாக்குதலில் துணைப்படையினர்

**1993** ஆம் ஆண்டு, கார்த்திகைத் திங்கள் 1 ஆம் நாள். மணலாற்றுத் துணைப்படை முகாமிற்கு முல்லை மாவட்டத் துணைப்படையில் பெரும் பகுதியினர் அழைக்கப்பட்டிருந்தனர். 2 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணிக்கு தளபதி முகாமிற்கு வருகை தந்திருந்தார். சில நிமிட கலந்துரையாடலின் பின்னர் அணிகள் தனித்தனி பிரிக்கப்பட்டன. சண்டை ஒன்றுக்குச் செல்லப்போகின்றோமென்பது அனைவருக்கும் தெரிந்திருந்தது. ஆனால் எங்கே, எப்போது என்பது மட்டும் எவருக்கும் தெரியாது. ''எங்களுக்குள் என்ன பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அவற்றை இங்கு வந்து கதைத்துக் கொள்வோம்; அதுவரை பொறுமையாக இருந்து, தரப்படும் பணிகளைச் செய்து, முல்லை மாவட்டத்தின் பெருமையை, துணைப்படையின் பெயரினைக் காப்பாற்றிப்போடுங்கோ'' என்ற வார்த்தைகளை மட்டும் எமது மாவட்டத்தின் தளபதி, மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொண்டார்.

மழைத்துளிகள் விழ ஆரம்பித்தன. வீட்டு நினைவுகளிலிருந்து அனைவரும் விடுபட விரும்பினோம். சமையல் கொட்டிலில் இருந்த குடமொன்று எமது அணியினர் இருந்த பகுதிக்கு வந்துசேர்ந்தது. அதுதான் மிருதங்க இசைக்கருவி. பாடத் தொடங்கினார்கள். பாடத் தெரியாது என்று எவரும் இருக்கவில்லை. அனைவருமே பாடகராய் மாறினர். புரட்சிப் பாடல்கள், தத்துவப் பாடல்கள், பக்திப்பாடல்கள் எல்லாம் மாறிமாறி வந்தன. இனம்புரியாத இன்பமும் துன்பமும் கலந்த இரவாக அது நகர்ந்துகொண்டிருந்தது. பசியும் இல்லை; தூக்கமும் இல்லை. இரவு 11 . 30 மணியிருக்கும். வெளியே சென்றிருந்த தளபதி மீண்டும் வந்திருந்தார். தூறலாகத் தொடங்கிய மழை வேகமாகக் கொட்டியதை, தளபதி நன்றாக நனைந்து வந்ததிலிருந்து அறிந்துகொண்டோம்.

'' எல்லோரும் சாப்பிட்டுவிட்டீர்களா?'' என்று தளபதி கேட்ட கேள்விக்கு, ''ஆம்'' என்று எல்லாரும் ஏககாலத்தில் பதில் கொடுத்தார்கள் ஆனால் பலர் சாப்பிடவில்லை என்பது எனக்குத் தெரியும். சண்டையென்று புறப்பட்டுவிட்டால் சாவு வருவதும் தவிர்க்கமுடியாததென்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் வீணாக நாங்கள் மரணிப்பதற்கு எமது வீரர்கள் சந்தர்ப்பம் கொடுக்கமாட்டார்களென்பதும் தெளிவாகத் தெரியும். இருந்தாலும் சாப்பிடுவதில் எவருக்கும் புலன் செல்லவில்லை. ஒழுக்கவிதிகள் பற்றி சில நிமிடங்கள் கலந்துரையாடிய பின்னர், ''எல்லோரும் ஓடிச்சென்று வாகனங்களில் ஏறுங்கோ'' என்ற பணிப்பு விடுக்கப்பட்டது. ஓடிச்சென்று ஏறினோம். ஒன்றன்பின் ஒன்றாக அனைத்து வாகனங்களும் புறப்படத் தொடங்கின. இருளைக் கிழித்துக்கொண்டு பயணம் தொடர்ந்தது. எமது மாவட்டத்தை விட்டு வெளியே செல்கின்றோமென்ற உண்மையை, சற்று நேரத்தின் பின் அனைவரும் தெரிந்துகொண்டனர்.

மனித நடமாட்டமற்ற காட்டுவழியில் வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்தன. எல்லோரும் ஒருவரை ஒருவர் கேள்விக்குறியுடன் நோக்கியவண்ணம் இருந்தனர். பலருக்கு ஏற்கெனவே அந்தப் பாதை தெரிந்திருந்ததால் எங்கே செல்கின்றோமென்பதைத் தெரிந்துகொண்டனர்; இருப்பினும் மௌனமாக இருந்தனர். அன்றிரவு அமைதியாகவே விடிந்தது.

மறுநாட் காலை 9.00 மணியளவில் அனைவரும் ஒன்றுகூடினோம். மன்னார் மாவட்டத் தளபதி எம்முடன் கலந்துரையாடினார். ''நீங்கள் என்ன பணிக்காக வரவழைக்கப்பட்டுள்ளீர்களென்பது எனக்குத் தெரியும். உங்களுடைய பணிக்குரிய நாள் வரும்வரை எங்களுக்கு இன்னுமொரு பணி செய்து தரவேண்டும். அதுவும் ஒரு பொறுப்புமிக்க பணிதான். சமையற் பணிதான் அந்தப்பணி. இது உங்களுக்குப் புதிய இடம். கண்டபடி வெளியே செல்லாதீர்கள். எங்களுடைய வெற்றிக்கு உங்களின் பூரண ஒத்துழைப்பை வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இன்று மாலையிலேயே சமையல் பணியைத் தொடங்கலாம்'' என்று அவர் சொல்லிக்கொண்டார்.

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலுக்கு உதவிப்பணிக்காக நாம் வந்துள்ளோமென்ற உண்மை, அனைவருக்கும் தெளிவாயிற்று. எமது மாவட்டத்தை விட்டு ஏன் இங்கு எங்களை அழைத்துவந்தார்கள் என்ற கேள்வி அனைவரின் மனதிலும் ஒருமுறை தோன்றினாலும், அடுத்த கணம் அது மறைந்து போயிற்று. மணலாற்றுத் துணைப்படை (முல்லை மாவட்டம்) மன்னார் சண்டையில் பங்கெடுத்தார்களென்ற பெருமை மட்டுமல்ல, தமிழீழ மக்களை இது விழிப்படையவும் செய்யும் என நினைத்துக்கொண்டோம். இதனைவிட எங்களை வளர்த்துப் பெருமை சேர்த்த அன்பண்ணனின் பிறந்த மண்ணை விடுவிக்கும் சண்டைக்கு வந்துள்ளோம் என்ற மகிழ்வு, புதிய உற்சாகத்தினைக் கொடுத்தது. எங்கள் பணி அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று நினைத்தபோது, அனைத்துத் துயரங்களும் பறந்துபோயிற்று.

சண்டை உடனே தொடங்கும். ஓரிரு நாட்களில் வீடு திரும்பலாம் என நினைத்தோம். சமையல் அடுக்குகளைப் பார்த்தபோது, நாலைந்து நாட்களுக்கு நீடிக்கும் என்பது தெரிந்தது. ஒவ்வொரு நாள் இரவும் புதிய அணிகள் வர்து கொண்டிருந்தன. அதற்கேற்ப சமையல் அளவும் அதிகரித்தது. 8 ஆம் திகதி காலையிலிருந்து சமையலைத் திட்டமிட்டு நடாத்த வேண்டியிருந்ததால், நான்கு அணிகளாகப் பிரிந்து சமைக்கத் தொடங்கினோம். தொடர்ச்சியான சமையல் சற்றுக் களைப்படையவைத்திருந்தது ஆனால் எமது போராளிகள் இரண்டு மூன்று மாதங்கள், இரவு பகல் பாராது எடுத்த கடுமையான பயிற்சியை நினைத்தபோதெல்லாம் களைப்பு தெரியாதுபோயிற்று.



ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டதாலும், புதிய- பழகிய போராளிகள் பலர்வந்து உரையாடத் தொடங்கியதாலும் வீட்டு நினைவுகள் மறந்துபோயின.

1993 . 11. 9ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலையில், மூத்த தளபதி சொர்ணமும் எமது மாவட்டத்தின் தளபதியும் வந்தனர். சலிக்காத எங்களின் பணி அவர்களை மகிழ்வடையச் செய்தது உற்சாகம் தரும்வகையில் எம்முடன் கலந்துரையாடிவிட்டு, நாளைக்காலையில் மீண்டும் சந்திப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றிருந்தனர். சண்டை, நாளை தொடங்கும் என்பதை அனைவரும் எதிர்பார்த்தோம். ஏனெனில் அதற்கான இறுதி நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தொடர்ச்சியாக நெருப்பு

**மணலாறு விஜயன்**

வெக்கையில் நின்றதாலும், குளிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லாமையினாலும் எம்மில் பலருக்குக் காய்ச்சல் கண்டிருந்தது. அருகே இருந்த மந்துக் காட்டில் மழைக்குத் தேங்கிய தண்ணீரை குளமென்று சொல்லி, பலர் குளிக்கச் சென்றார்கள். அதைக் குளம் என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. அதன் பக்கத்தில் நாலைந்து நாவல் மரங்கள் நன்கு பழுத்து நின்றன. நாவலும் எம் வீரர்களும் பட்டதேபாடு. இரண்டு நாட்களில் மரத்தை வெட்டைகண்டார்கள்.


**“ உங்களை நம்பி ஏணிப்படிகளில் நாங்கள் ஏறலாமா? உறுதியாய்ப் பிடித்துக்கொள்வீர்களா? ” என்று தளபதி சொர்ணம் கேட்டபோது, “ஆம்” என்ற குரல் ஓங்கி ஒலித்தது.**

1993 . 11. 10 ஆம் நாள் புதன்கிழமை காலையிலிருந்து, சமையல் பணியிலிருந்து எமக்கு ஓய்வு தரப்பட்டது. நோயாளிகள் தவிர்த்து அணிகள் சீர் செய்யப்பட்டன. 9ஆம். திகதி இரவு வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்தும் துணைப்படை அணிகள் பல வந்தன. காலை உணவுக்குப் பின் சொர்ணமண்ணனும் எமது மாவட்டத் தளபதியும் வந்திருந்தனர். அனைவரும் அணிவகுத்து ஒரிடப்படுத்தப்பட்டோம்; சொர்ணமண்ணன் எங்களுடன் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்:

'' இன்று இரவு நாம் பூநகரி இராணுவத் தளத்தைத் தாக்கி அழிக்கப் போகின்றோம். இத் தாக்குதலில் வெற்றி எங்களுக்குத்தான் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் படைமுகாமில் ஒரு கேணல் உட்பட இரண்டாயிரம் இராணுவத்தினர் வரை இருக்கின்றனர். ஒருநாள் அல்லது இரண்டுநாள் அல்லது மூன்றுநாட்கள்கூட இந்தச் சண்டைநீடிக்கலாம்; ஆனால் வெற்றி எங்களுக்குத்தான். நாம் அடித்து முன்னேறிக்கொண்டிருப்போம். காயமடைந்த வீரர்களையும், இராணுவத்தின் படைக்கலன்களையும் உடனுக்குடன் நீங்கள்தான் எடுத்துச்செல்லவேண்டும் நீங்கள் சண்டைக்கு இறங்கத் தேவையில்லை. தேவையான வீரர்கள் அதற்காக இருக்கிறார்கள். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இராணுவ உபகரணங்களையும் எமது காயமுற்ற வீரர்களையும் வேகமாக வெளியே எடுத்துவருவதுதான். நீண்டதூரம் இவற்றை எல்லாம் நீங்கள் தூக்கத் தேவையில்லை. உள்ளே நூற்றுக்கணக்கான உழவியந்திரங்கள் வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன; அவற்றையும் நீங்கள்தான் ஓட்டிச் செல்லப்போகின்றீர்கள். இந்த வெற்றி எமது விடுதலைப் போரினை புதியபாதைக்கு இட்டுச் செல்லும். புலிகளின் கழுத்து நெரிக்கப்பட்டுவிட்டது; அவர்கள் அழிக்கப்பட்டுவிட்டார்கள் என்று கருதும் சிங்கள அரசுக்கும், இராணுவத்துக்கும் எமது பலம் எத்துணை வலிமையானதென்பதைச் செயல்மூலம் எடுத்துக்காட்டப் போகின்றோம். எமது இந்தத் தாக்குதலின் வெற்றிக்கு, மண்கிண்டி இராணுவ முகாம் தகர்ப்புக்கு எவ்வாறு ஒத்துணையாகவிருந்து செயற்பட்டீர்களோ, அதேபோன்று செயற்பட வேண்டும்; செயற்படுவீர்களா?'' என்று கேட்ட கேள்விக்கு, '' ஆம்'' என்று அனைவரும் ஒருமித்துப் பதில் கூறினர். ''உங்களை நம்பி ஏணிப்படிகளில் நாங்கள் ஏறலாமா? ஏணியை உறுதியாய்ப் பிடித்துக்கொள்வீர்களா?'' என்றபோதெல்லாம் உற்சாகமாக, '' ஆம் '' என்ற குரல் ஓங்கி ஒலித்தது.

மாலை 4. 45 மணியளவில் சத்தியப்பிரமாணத்துடன் படை நகர்வுகள் ஆரம்பமாகின. மாலை 6 மணிக்கெல்லாம் மழை கொட்டத் தொடங்கியது என்றுமில்லாதவாறு அன்று வானம் இடிந்துவிழுவது போன்று ஊற்றியது. நனைந்தபடியே முகாம்நோக்கி ஓடிக்கொண்டிருந்தோம்; மழைக்காகக் காத்திருந்தால் இலக்கைத் தவறவிடவேண்டி ஏற்படும். எதிர்நீச்சல் போட்டே வெற்றிகண்டு பழகிப்போன போராளிகள் அல்லவா!

பாழடைந்த பிரதான வீதி எங்கும் வெள்ளம் தேங்கிநின்றது. கொட்டும் மழையிலும் இலக்கினை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் பெண் போராளிகளைப் பார்த்தபோது, எங்களுக்கெல்லாம் புதியவேகம் பிறந்தது: எறிகணைகள், கனரக ஆயுதங்கள் என்பவற்றைச் சுமந்து



கொண்டு எவ்வளவு வீராவேசத்துடன் ஓடிக் கொண்டிருந்தார்கள்! உலகில் எந்த ஒரு நாட்டிலும் இத்துணை பலம்வாய்ந்த பெண்கள் படையணி இருந்திருக்கமுடியாது.

இரவு 10.00 மணிக்கெல்லாம் இராணுவ முகாமை அண்மித்துள்ள இடங்களில் நின்றிருந்தோம். எம்மைத்தாண்டி எம் தியாகக் குழந்தைகள் முன்னேறினர். வயல்வெளிகள் எங்கும் வெள்ளம் தேங்கி நின்றது. மழைவிட்டிருந்தது. இராணுவ முகாம்களைத் தாக்கும் எல்லைக்குள் செல்வதற்கு அன்றைய இயற்கையின் செயல் பெரிதும் சிரமத்தைக் கொடுத்தது. இருப்பினும் பல மாதங்கள் அவர்களெடுத்த பயிற்சியின் முன்னே, அது தூசாகிவிட்டது. இராணுவ முகாமில் சுழன்றுகொண்டிருந்த தொலைதூர ஒளிபாய்ச்சும் மின்குமிழ் தன்வேலையைச் செய்துகொண்டேயிருந்தது. இடையிடையே இராணுவத்தினர் தாம் விழிப்புடன் இருப்பதை துப்பாக்கி வேட்டுக்களால் காட்டினர். இது எங்களுக்குப் புதுமையாக இருந்தாலும் எமது வீரர்களுக்குப் பழகிப்போனதொன்று.

நடு இரவு தாண்டிவிட்டது. திடீரென துப்பாக்கிகள் பல வேகமாக இயங்கத் தொடங்கின. கடிகாரத்தைப் பார்க்கின்றேன். 1.35ஐக் காட்டியது. அனைத்துத் திசைகளிலும் வெளிச்சக்குண்டுகளை படையினர் வீசினர். திரும்பும் திசையெங்கும் எறிகணைகளும், துப்பாக்கிக் குண்டுகளும் வீரமுழக்கம் செய்தன. உடலிலுள்ள ரோமங்கள் குத்தி நின்றன. சில மணித்தியாலங்களில் எங்களின் பணி ஆரம்பமாகியது. காயமுற்ற எமது வீரர்களை, உயிர் கொடுத்த உத்தமர்களைச் சுமக்கத் தொடங்கினோம். எங்களின் வேகத்தைவிட எமது வீரர்கள் பலநூறு மடங்கு வேகத்துடன் முன்னேறிக்கொண்டிருந்தனர். வேதனை ஒருபுறமும் மகிழ்வு ஒருபுறமுமாக ஓடிஓடிச் சுமந்தோம் எமது வாகனச் சாரதிகள் வேகமாகவும், சாதுரியமாகவும் இயங்கிக்கொண்டிருந்தனர். சிங்கள தேசத்தின் வான் படை விமானங்கள் அனைத்தும் முழுவேகத்தில் செயற்பட்டன. அவற்றின் தாக்குதலைக் கருத்தில் கொள்ளும் மனோநிலை எவரிடமும் இருக்கவில்லை.

தூக்கம், துயர், களை மறந்து தாக்குதலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எம் வீரர்களைப் பார்த்தபோது தலை சுற்றியது; கண்ணீர் பொங்கியது. சிரித்துச்சிரித்தே எதிரியின் காப்பரணை நோக்கி ஓடினார்கள். வீர விளையாட்டொன்று, வெற்றியும் சோகமும் நிறைந்த வீர சாகசமொன்று நடந்துகொண்டிருந்தது. மக்களின் துயர்துடைக்க ரத்த வேள்வி ஒன்று நடந்துகொண்டிருந்தது. துப்பாக்கிக் குண்டுகளின் நடுவே புயலாய்ப் பாய்ந்துகொண்டிருந்த பெண் புலிகளைப் பார்க்கின்றேன். என்ன வீரம், என்ன தியாகம், இவர்களின் வீரத்துக்கு மலையை ஒப்பிடுவதா வானத்தை ஒப்பிடுவதா கடலை ஒப்பிடுவதா.....? விளங்காத விந்தையான வீரத்தைக் கண்டுகொண்டிருந்தேன். நான்கு திசைகளிலிருந்தும் வந்த வெற்றிச் செய்திகளை 'வோக்கி ரோக்கி'கள் முழங்கிக்கொண்டிருந்தன. அன்று பகல் வந்ததும், பின் இரவு வந்ததும் பிரமை போலிருந்தது.

நாகதேவன்துறை கடற்படைத் தளமும் ஏனைய மூன்று படை முகாம்களும் அன்று முழுமையாக அழிக்கப்பட்டிருந்தன. எஞ்சியிருந்த ஒரு படை முகாமைத் தாக்கி அழிப்பதற்கான புதிய சண்டைகள், அன்று இரவே ஆரம்பமாகின. அன்றைய இரவுதான் எம்மையெல்லாம் வளர்த்தெடுத்த அன்பண்ணனின் வீரம் அவர் பிறந்த மண்ணில் விதையாகின்றது. நடு இரவு தாண்டி விடிகின்ற காலையில் அவர் முடிவு எம்மை எட்டுகின்றது. பசிமறந்து களைமறந்து தூக்கம் மறந்து அழுதோம்; அழுதால்தான் மனம் ஆறும். துணைப்படையை உருவாக்கி, எல்லையில் எம்மைத் துணிவோடு நிறுத்தி வேண்டியபோதெல்லாம் விரும்பிய துப்பாக்கிகளைத் தந்து, திசை மாறி நின்றவர்க்கு நேர்வழிகாட்டி, பூநகரிவரை வரும் துணிவைத் தந்து வளர்த்த 'அன்பு' அண்ணன், பிறந்த மண்ணில் மரணிக்கும் பாக்கியம் பெற்றுவிட்டார். கண்முன் மறையாது நிற்கும் அந்தக் களநினைவுகளில், கடல் நின்று களம் வென்ற கடற்புலிகளின் வீரத்தை எழுதுவதா......? எதிரியின் உடல்மீது ஏறி நின்று 'புறம்'பாடிய பெண்புலிகளைப்பற்றி எழுதுவதா......? வான்படை வட்டமிட வைத்த அடி நகராமல் சிங்களத்தைச் சிதறடித்த வீரப்புதல்வர்களின் விந்தைகள் எழுதுவதா......? எதிரியின் டாங்கியை எடுத்து ஓடி வந்த எங்கள் மறக்குலத்தின் வேகத்தை எழுதுவதா......? நாமென்ன எழுதுவது; உலகவரலாறே தன் சாதனைப் புத்தகத்தில் எழுதிவிட்டது!

வெற்றிமேல் வெற்றியை, துயரத்தின் சுமைகளை, இழக்கக்கூடாத எங்கள் 'அன்பைச்' சுமந்தவர்களாய் நீங்காத நினைவுகளோடு- 14ஆம் திகதி அதிகாலை மணலாறு நோக்கி எம் பயணம் தொடர்ந்தது. ○

# போரும் சமாதானமும்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் வற்புறுத்தவில்லை ஏற்கெனவே ஒரு தடவை தலைவரைச் சந்தித்தாகிவிட்டது. நேரில் வந்து, நேசக்கரம் நீட்டி, சமாதானத்திற்கு சமிக்ஞையும் காட்டியிருக்கிறார் தலைவர். அப்படியிருந்தும் சிங்கள தேசம்தான் சமாதானக் கதவுகளை இறுகப் பூட்டிவைத்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் மீண்டும்மீண்டும் சந்தித்து, மீண்டும்மீண்டும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. கொழும்பிலுள்ள அரசியல் செவிடர்களுக்கு இங்கிருந்து எத்தனை தடவைகள் சங்கை ஊதினாற்போலும் கேட்கவா போகிறது? ஆயர் விசயமறிந்தவர். அதனால் அவர் மீண்டும் சந்திப்பை வற்புறுத்தவில்லை

ஆயர்கள் இங்கு வந்தபோது சர்வோதயத் தலைவர் ஆரியரத்தினாவும் இங்கு வந்தார். அவரைப் புலிகளின் சார்பில் அரசியல் துணைப் பொறுப்பாளர் கரிகாலன் சந்தித்தார். ஆயருக்குச் சொல்லப்பட்டதே அவருக்கும் சொல்லப்பட்டது.

வந்தவர்கள் திரும்பிவிட்டார்கள். அவர்கள் எதையுமே புதிதாகக் கொண்டுவரவில்லை; எதையுமே புதிதாகக்கொண்டு செல்லவுமில்லை. தமிழ் மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள்; புலிகளும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். இந்தப் பழைய செய்தியைத்தான் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதைத்தான் கொழும்பிலும் சொல்லப் போகிறார்கள். கொழும்பிலும் புதிதாக எவ்வித திருப்பமும் ஏற்படப் போவதில்லை.

போரை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் விரும்பவில்லை; பொருளாதார நெருக்குதலைத் தளர்த்தவும் விரும்பவில்லை. போரையும் பொருளாதார நெருக்குதலையும் அரசியல் அழுத்தமாகவே அரசு கணிக்கிறது. இந்த அழுத்தங்களோடு பேச்சு என்ற பொறியை வைக்க அரசு விரும்புகிறது. புலிகள் எந்த அளவிற்கு விட்டுக்கொடுப்பார்கள், எந்த அளவிற்கு இறங்கிவருவார்கள் என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம். இந்த நோக்கில்தான் சமாதானத் தூதுகளையும் அரசாங்கம் ஊக்குவிப்பதுபோலத் தெரிகிறது.

இனி வருவது தேர்தல் யுகம். இந்தக் காலகட்டத்தில் கவனமாகக் காய்களை நகர்த்த வேண்டும் என்பது, ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு நன்கு தெரியும். இந்தக் காலத்தில், சிங்களப் பேரினவாதத்திற்குத் தீனி போடுவதையே அரசியல்வாதிகள் விரும்புவார்கள். தமிழர்களுக்கு நீதி வழங்குவது என்பது அரசியற் தற்கொலையாக முடியும். எனவே, இந்தக் கட்டத்தில் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி, தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பது, அரசாங்கத்தின் நோக்கமல்ல.

போருக்கு ஓய்வு கொடுப்பதை அரசு விரும்பாததற்குப் பல காரணங்கள் உண்டு. இராணுவம் இன்னும் மேலாதிக்க நிலையை எட்டிவிடவில்லை. தோல்விக்கு மேல் தோல்வியைச் சந்தித்து படையினரின் மனவுறுதி தளர்ந்திருக்கிறது. இன்றைய சூழலில் இராணுவ சமபலம் புலிகளுக்குச் சார்பாக இருக்கிறது இந்த நிலைமையில் போரை நிறுத்திக்கொள்வது புலிகளுக்கே அனுகூலமாக அமையும் என, அரசு அஞ்சுகிறது. பலத்தின் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, ஆதிக்க வலிமையுடன் - அதிகார தோரணையில் - பேசுவதையே அரசு விரும்புகிறது. அதற்கு இன்னும் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் சரியாக வரவில்லை. அதற்கு வெற்றிகள் வேண்டும்; போர்ச் சாதனைகள் புரிய வேண்டும்; ஆக்கிரமிப்பு வேலைகளைச் செய்ய வேண்டும்; புலிகளை இராணுவரீதியில் பலவீனப்படுத்த வேண்டும். இதை எல்லாம் செய்துகாட்டலாம் என இராணுவத் தலைமை நம்புகிறது; அதற்கான தயாரிப்புகளையும் செய்கிறது. ஆகவே, போருக்கு ஓய்வுகொடுப்பதை இராணுவம் விரும்பவில்லை. போரைத் தொடர்வதில் தேர்தல் அனுகூலங்கள் இருப்பதாகவும் அரசு நினைக்கிறது. தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணாது தட்டிக்கழிக்கலாம்; 'தமிழரின் பயங்கரவாதம்' என்ற கோஷத்தின் கீழ் சிங்களவரின் தேசியவாதத்தில் குளிர்காயலாம்; பேரினவாத சக்திகளைத் தனக்குச் சார்பாக அணிதிரட்டிக்கொள்ளலாம்; சமூக, பொருளாதார பிரச்சினைகளையும் திசைதிருப்பிவிடலாம். இதனால் போரைத் தொடர அரசு விரும்புகிறது.

படைகளுக்கு ஏற்பட்டுவரும் பேரிழப்புகள் காரணமாக, யுத்தத்திற்கு எதிரான குரல் ஒன்றும் தென்னிலங்கையில் எழுகிறது. இது பாமர மக்கள் மட்டத்திலிருந்து எழும் அங்கலாய்ப்பு; பணத்திற்காக பிள்ளைகளை இராணுவத்திற்கு அனுப்பி, பிணத்தைக்கூடப் பார்க்கமுடியாத பெற்றோரின் அவலக் குரல். இது மெல்ல மெல்லப் பலம்பெற்று வருகிறது. அத்துடன் உதவி வழங்கும் உலக நாடுகளும் ஓரளவு அழுத்தம் போடுகின்றன. புலிகளை வெல்ல முடியாத ஒரு போரில் பெருந்தொகைப் பணம் விரயமாகிறது. யுத்தமும் முடிவில்லாத கதையாகத் தொடர்கிறது. அரசின் வலுவுக்கு இது அச்சுறுத்தலாக அமைகிறது. இலங்கையில் பெருமளவு முதலீடு செய்வதற்கோ, அன்றி இத் தீவை உலக முதலாளியத்தின் ஒரு வர்த்தக வலையமாக மாற்றுவதற்கோ, முடிவில்லாமல் தொடரும் இப்போர் ஒரு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இதனால் சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்க்க முயலுமாறு மேற்குலகம் சிறீலங்காவுக்கு அழுத்தம் போடுகிறது. போருக்கு எதிராக எழும் இந்த ஆட்சேபக் குரல்களைத் திருப்திப்படுத்துவதற்காக, சமாதானப் பேச்சில் அக்கறை காட்டுவது போல அரசாங்கம் நடிக்கிறது. சமாதானப் பேச்சுக்கு அரசு தயாராக இருக்கிறது; ஆனால் புலிகள் பேச்சை விரும்பவில்லை என்ற பொய்ப் பிரச்சாரத்தையும் மேற்கொண்டு வருகிறது. எந்தச் சூழ்நிலையிலும் தலைவர் பிரபாகரன் கொழும்பிற்கு வரமாட்டார் என்பதை நன்கு தெரிந்திருந்தும், அவர் கொழும்பு வந்து தன்னுடன் பேசலாம் என ஜனாதிபதி அழைப்பு விடுவதும் "அழைத்தாலும் அவர் வருகிறார் இல்லையே" எனப் பின்பு புலம்புவதும், விஷமத்தனமான பிரச்சாரமன்றி வேறொன்றுமல்ல.

உலகத்திடமிருந்து கடன்வாங்கும் பருவகாலம் நெருங்கிவிட்டது. இந்தப் பருவகாலத்தில் சமாதான தூதுக்களை ஊக்குவிப்பதும், சமாதானத்திற்கான பொய்ச் சமிக்ஞைகளைக் காட்டுவதும், வருடா வருடம் சிறீலங்கா அரசு மேடையேற்றும் அரசியல் நாடகமாகும். புளித்துப்போன இந்த நாடகத்தை, மேற்குலகத் தனவந்தர்கள் சலிப்புறாமல் ரசித்துக்கொண்டிருப்பதுதான் எமக்கு வியப்பாக இருக்கிறது. ○

# இரத்தமும், தசையும், உயிருமாக...

## - தென் தமிழீழத்து வாழ்வு

மன்னம்பிட்டி ஒரு சிறிய கிராமம். பொலநறுவை மாவட்டத்தின் எல்லையோடு அது அமைந்துள்ளது. பிரதான வீதியில் ஒரு பக்கம் சிங்களக் கிராமத்தையும், அடுத்த பக்கம் ஒரு முஸ்லிம் கிராமத்தையும் கொண்டிருந்த தமிழ் ஊர் அது. 1992 ஆம் ஆண்டின் துவக்கப் பகுதியில் ஓர் இரவு. சனங்கள் உறங்கினார்களோ இல்லையோ ஊர் பேச்சுமூச்சற்றுக் கிடந்தது. சிங்கள - முஸ்லிம் காடையர்களோடு, இராணுவத்தினர் இரு பக்கங்களாலும் நுழைந்தனர். துப்பாக்கிகளைவிட அவர்களுக்கு அதிகம் பிடித்தமான கத்திகள், பொல்லுகள், வாள்கள், அலவாங்குகள் கைகளில் கிடந்தன. நாய்களின் வெறித்தனமான குரைப்பு ஊரைத் துடித்தெழச் செய்தது.

அன்று நடந்த கோரத்தின் அதிர்ச்சியிலிருந்து இன்றும் மீளாத ஒரு சிறுவன் எரிந்து சாம்பரான அந்த இரவின் கதையைச் சொன்னான் -

தாய்மாரைக் கட்டிப்பிடித்தபடி ஆழ்ந்து தூங்கிய பச்சிளங் குழந்தைகளை, கால்களில் பிடித்து பிடுங்கி இழுத்தார்கள். பதறி எழுந்து ''ஐயோ!...... என் குழந்தை......'' அன்னை சொல்லி முடிக்கமுன், வீறிட்டுக்கத்திய மழலையின் பிஞ்சு முகத்தைச் சுவரோடு ஓங்கி அறைந்து சிதறடித்து, ''இந்தா... பிடி......'' எனத் தாயின் மடியில் எறிந்துவிட்டுப் போனார்கள்.

கணவனைத் தூக்கி இழுத்து பெற்றோலைத் தலையில் ஊற்றித் தீப்பெட்டியைத் தட்டியபோது, ''ஐயோ...அவரை விடுங்கோ ..'' எனக் கதறியோடிவந்து கட்டிப்பிடித்த துணைவியையும் சேர்த்துக் கட்டி, ''நீயும் அவரோடயே போ .....'' என்று தீ மூட்டிய வெறியர்கள், மரண ஓலமிட்டு - துடித்துத் துடித்து மெல்ல அடங்கி கருகி முடியும்வரை கும்மாளமிட்டுச் சிரித்தார்கள்.

பயந்தொடுங்கி, பெற்றோருக்கிடையில் பதுங்கி ஒளித்த பெண்பிள்ளைகளை வெளியில் இழுத்தார்கள். பெற்றவர்கள் பார்த்து நிற்கவே, உடைகளைக் கிழித்தெறிந்தார்கள். உடல் சோர்ந்து, உணர்வு சோர்ந்து, உயிர் சோர்ந்து சாகும்வரை அவர்கள்மீது காமவெறியாடிய காடையர் கூட்டம் - போகும்போது - பிள்ளைகளின் பிணத்தைத் தூக்கிப் பெற்றவர்களின் கையில் கொடுத்துவிட்டு, எக்காளச் சிரிப்போடு வெளியேறியது.

மூன்று நாட்கள் நரவேட்டைக்குப் பிறகு - வயல்கள், வீடுகள், குடிசைகள், ஆலயம், பாடசாலை என - அந்தச் சின்னக் கிராமம் முற்றிலுமாகக் கருகிப்போய்க் கிடந்தது. மனித சஞ்சாரமே அற்று மன்னம்பிட்டி வெறிச்சோடிப் போயிருந்தது. வீதிகளில் இழுபட்ட பிணங்களை நாய்கள் நரிகளோடு, பறவைகளும் உணவாக்கின. துல்லியமான புள்ளிவிபரங்கள் இல்லையாயினும், கொல்லப்பட்டவர்களது தொகை 250 இற்கும் அதிகம் என்பது பிழைக்காது. இத்தொகை 450 - 500 வரைகூட இருக்கலாம். 1500 குடும்பங்கள் வரை வாழ்ந்த அந்தக் கிராமத்தின் அத்தனை குடிகளும் விரட்டியடிக்கப் பட்டனர்.

பாடசாலையின் தளபாடங்களை முஸ்லிம் சிங்கள அயல் கிராமங்கள் பங்கிட்டுக்கொண்டன. வீடுகளை உடைத்து கதவுகள், சாளரங்கள், ஓடுகளைச் சேதாரமில்லாமல் கழற்றி பத்திரமாக எடுத்து, பக்கத்துக் கிராம வீடுகளுக்காக வாகனங்கள் ஏற்றிச் சென்றன. மேனி உருக்கிச் சேனை செய்து எம்மக்கள் சேர்த்து வைத்த நெல்மூடைகள், உழவு இயந்திரத் தொடுப்பிகளில் அடக்கி அப்புறப்படுத்தப்பட்டன. கொண்டுசெல்ல வசதியற்று எஞ்சிய பொருட்கள் எல்லாம் நெருப்புக்குக் கொடுக்கப்பட்டன. அறுவடைக்குத் தயாராயிருந்த வயல்களின் வரம்புகளைத் தாவிக்கடந்த படை வண்டிகள், 'சூடடித்து' விட்டுப்போயின.


பரிபூரணமான ஒரு ஊரழிப்பு நடந்து முடிந்தது.

மன்னம்பிட்டி ஒரு உதாரணம் மட்டும் தான்.

திருக்கோணமலைத் துவக்கத்தில் சாம்பல் தீவிலிருந்து, மட்டக்களப்பின் வாகரை, வாழைச் சேனை, கிரானுக்கூடாக அம்பாறைத் தொங்கலில் வீரமுனைவரை, இதுதான் நடந்தது; இப்போதும் நடந்துகொண்டிருக்கிறது. எந்தக் கிராமமும் எந்த நேரத்திலும் வேட்டையாடப்படலாம். இன்று செழித்திருக்கும் எந்தவொரு ஊரும், நாளை செத்துப்போய்க் கிடக்கலாம். அந்த மக்கள் சொல்கின்ற துயரக்கதைகளை, இதயமுள்ள ஒருவரால் சொற்ப நேரத்திற்கப்பால் கேட்டுக்கொண்டிருக்க முடியாது; அப்படிக் கேட்கின்ற எவரும் அன்றிரவு தூங்க முடியாது. பொஸ்னியா, சோமாலியா என எங்கு என்ன நடந்தாலும்கூட - நவீன உலக வரலாற்றில் - மிகக் கோரமான இன வன்முறைக்குள் சிக்கி நசுங்கும் ஒரு மக்களினம் நாங்களாகத்தான் இருக்கும்.

தாங்கள் செய்கின்ற ''திருவிளையாடல்கள்'' பற்றிய தகவல்கள் வெளியில் போகாத வண்ணம், துப்பாக்கி வலைவிரித்து நிற்கும்

கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்ட குறைந்தது 167 பேரில் தாயும், தந்தையும், தனயனும்.



> “இத்தனை காலமாக பட்டுவிட்ட துன்பங்கள் போதும். இனி முடியாது.”

சிங்கள தேசத்துப் படைகளின் கைகளில், எங்கள் தாயகத்தின் தென்பிராந்தியம் துவண்டு போய்க் கிடக்கின்றது.

கல்லாறைச் சேர்ந்த அவருடைய பெயர் **இராசன்**. அவர் ஒரு கடற்றொழிலாளி. ஒரு நள்ளிரவுப் பொழுதில் வந்தவர்கள் தட்டி எழுப்பிக் கூட்டிப் போனார்கள். தேடாத இடமில்லை; தேடியும் ஆளில்லை: என்றானபின் ஒரு நாள் - '' 75,000 ரூபா, பணத்தோடு வந்து ஆளைக் கூட்டிச்செல்லவும்'' 'ரெலோ' முகாமிலிருந்து தகவல்வந்தது. இருந்ததையெல்லாம் 'வித்துச் சுட்டும்' சேர்ந்தது 15, 000 ரூபா மட்டும்தான். ''இதை வச்சுக்கொண்டு ஆளை விடுங்கோ'' என்று மன்றாடிக் கெஞ்சியவர்களிடம் பணத்தை வாங்கிக்கொண்டு, ''நீங்கள் போங்கோ; ஆளை அனுப்பிவிடுகிறம்'' என்றான் ஒரு 'ரெலோ'க்காரன். வாரமொன்று போயும் வராத ஆளைத் தேடி 'ரெலோ' முகாம் போய் ஏனென்று கேட்டபோது, ''நீங்கள் பணம் கொடுத்தது யாருக்கென்று எனக்குத் தெரியாது. பிடித்து வந்தது நான்தான். சொல்லி அனுப்பியதைப் போல 75, 000 ரூபா தந்துவிட்டு ஆளைக்கொண்டு போங்கோ என்றான் அங்கிருந்த இன்னொரு 'ரெலோ'க்காரன். போனவர்கள் விக்கித்துப் போனார்கள். கத்தினார்கள்; கதறினார்கள்; ஒவ்வொரு சதம் காசுக்கும் பாடுபடும் தங்கள் வறுமை நிலையைச் சொல்லி அழுதார்கள். கரைந்து போனது கண்ணீர்தான்; அந்தக் கல்நெஞ்சங்களில்லை. திரும்பிப் போகும் போது, ''75, 000 ரூபா'' - ஞாபகப்படுத்தி அனுப்பிவிட்டார்கள்.

ஊர்க்காரரிடம் கடன் வாங்கி, உறவுக்காரரிடம் கடன்வாங்கி, கையிலிருந்த காணியையும் விற்று, வீட்டிலிருந்த எல்லாவற்றையும் விற்று குறிப்பிட்ட தொகையோடு முகாமிற்கு ஓடினார்கள். எண்ணி வாங்கிக்கொண்ட 'ரெலோ'க்காரன், ''வீட்டுக்குப் போங்கோ; ஆள் வருவார்'' என்றான். நம்ப முடியவில்லைத்தான்; மாற்று வழியுமில்லையே. நாள் நகர்ந்தது; ஆனால், ஆள் வரவில்லை. வராத ஆளைத்தேடி முகாமிற்கு ஓடினார்கள், அலுவலகமேசையில் - எதையோ - எழுதிக்கொண்டு - ''வேலையில் மூழ்கிப்போய் இருப்பவராய்'' இருந்த 'ரெலோ' அதிகாரி, குனிந்த தலை நிமிராமல் எழுதிக்கொண்டே சொன்னார் - ''நாங்கள் அவரை அனுப்பவேண்டிய இடத்திற்கு அனுப்பீட்டம். நீங்கள் அவருக்குச் செய்ய வேண்டியதுகளைச் செய்யுங்கோ!''

இது ஒரு உதாரணம்.

அவருடைய பெயர் **இராசையா**. கொக்கட்டிச் சோலை முனைக்காட்டைச் சேர்ந்தவர். 7 பிள்ளைகளின் தந்தையான அவருக்குச் சிறிய கடை ஒன்றிலிருந்து மட்டும்தான் வருமானம். 'ரெலோ' கும்பல் ஒரு லட்சம் ரூபா கேட்டது; மிரட்டியது. வேறு வழியற்ற நிலையில் குறித்த தொகையைச் செலுத்தினார்: பற்றுச்சீட்டும் பெற்றிருந்தார். இன்னொரு இரவு - திரும்பவும் வந்து - அவரைப் பிடித்துக்கொண்டு போனவர்கள், இம்முறை பணத்தோடு, அவரது மகளையும் கொண்டுவரச் சொல்லித் திருப்பி அனுப்பிவிட்டார்கள். நிலைமை சிக்கலானது. 'ரெலோ'க்காரர்கள் அடிக்கடி வந்தார்கள்; ''சொன்னவற்றைக் கொண்டு வா'' - மிரட்டினார்கள். பெரிய இழுபறி நடந்தது. வெளிநாடுகளுக்கோ, அல்லது வேறு மாவட்டத்திற்கோ ஓடி விடுமாறு ஊரவர்கள் ஆலோசனை சொன்னார்கள். ஆனால், எதுவரினும் எம் நிலம் விட்டு அசையோம், என அங்கேயே குடியிருந்தது குடும்பம்.

ஒரு காலை - கடைக்குப் போன மகள் காணாமல் போனாள். தேடினார்கள்; ஓடித்திரிந்தார்கள்; பயனில்லை. மறுநாள் - மிருகத்தனமான வகையில் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, கந்தல் துணிபோல வீட்டுக்கு வந்தாள் பிள்ளை. 'ரெலோ' கும்பல் அன்றிரவும் வந்தது; ''சொன்னபடி ஒரு லட்சத்தை நாளைக்கே தரவேண்டும்''- உத்தரவிட்டது. ''தரவில்லையானால் தலையிருக்காது''- எச்சரித்தது. உருக்குலைந்துபோன மகள்; உத்தரவாதமில்லாமல் போன உயிர்; நிம்மதியற்றுப்போன வாழ்வு. மறுநாள் மாலைப் பொழுதினில் - அந்தக் குடும்பம், ஒட்டுமொத்தமாக நஞ்சருந்திக் கொண்டது. ஊரவர்கள் ஓடிவந்தார்கள். ஆனாலும், இராசையா அவர்களையும், துணைவியாரையும். மகளையும், இரண்டு மகன்களையும் தவிர ஏனையவர்களை மட்டுமே அவர்களால் உயிரோடு காக்க முடிந்தது.

இது இன்னொரு உதாரணம்.

இதேபோன்று ஆயிரக்கணக்கில் நடந்த சம்பவங்களின் துயரங்களை இந்தப் பிராந்திய மக்கள் கதைகதையாகச் சொல்கின்றார்கள். ஆட்களைக் கடத்திப் பணயம் வைத்துப் பணத்தைக் கேட்பதும், முடிவில் - ஆட்களையும் கொன்று பணத்தையும் கொள்ளையிடுவதும் வழமையாகிவிட்டது. எங்காவது ஒரு இடத்தில் இது எந்நாளும் நடக்கும்; தொகை மாத்திரம் மாறுபடும். கடத்துகின்றவனின் தேவையைக் கேற்பவும், கடத்தப்படுகின்றவர்களின் பொருளாதாரப் பின்னணியைப் பொறுத்தும் - தீர்மானிக்கப்படும் பணயத்தொகையின் அளவு - ஐம்பதாயிரத்திலிருந்து இலட்சக்கணக்கில் உயர்ந்து செல்லும்.

மாலை 6.00 மணிக்குப் பிறகு, ''வீடுகளுக்கு வெளியே தலைக்கறுப்புத் தெரியக் கூடாது'' என்பது இங்கு சட்டம்; கட்டளை. என்னதான் உயிர்போகிற காரியமாக இருந்தாலும், மீறினால் உயிர்போகும். கருக்கல் பொழுதுகளில் போனவர்கள் ''காணமல் போனவர்களாய்'' போய்விடுவார்கள்; அல்லது, கண்டதுண்டமாகக் காலையில் மீட்கப்படுவார்கள். 'மயான அமைதி' என்பதின் மிகச்சரியான அர்த்தத்தை தென்தமிழீழத்து இரவுகளில் உணரலாம். இரவின் நிசப்தம் பயங்கரமானதாக இருக்கும். எந்த வீட்டிற்குள்ளும் எந்த நேரத்திலும் அவர்கள் நுழைவார்கள். அங்கிருக்கும் எவரையும் எந்தக் காரணத்தைச் சாட்டியும் இழுத்துச் செல்வார்கள். அப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்கள் வந்ததில்லை; வருவார்கள் என்ற நம்பிக்கை வீட்டிலுமில்லை.

''ஊரவங்க ஆராவது அவசரத்துக்கு வந்து கூப்பிட்டாலே, 'அவங்க தானோ?' எண்டு நெஞ்சு விறைச்சுப் போகும். எங்காச்சும் நாய் குலைச்சாலோ 'அவங்க தான் வர்றாங்களோ?' எண்டு பயம்மா இருக்கும்... நம்ம சனங்கள் நிம்மதியாத் தூங்கி நாலு வருசமாச்சு மகனே'' என்றார், வந்தாறுமூலையைச் சேர்ந்த நான்கு போராளிகளின் தாய் ஒருவர்

'பெண்டுகள் சேனை'யைச் சேர்ந்த - பூநகரிச் சமரில் களப்பலியாகிவிட்ட ஒரு புலிவீரனின் - தாயார் சொன்னார், ''விடியத்தால பாத்தா, ஆரிடையெண்டு அறியேலாத விதமா மனுசப் புணங்கள் தெருவோரத்திலையோ, ஆத்து மேட்டிலையோ கெடக்கும். தலையிருக்காது, கண்ணிருக்காது ... மண்டையப் பொளந்திருப்பாங்க ......ச்சீ...... அது ஒரு நரக வாழ்க்க......''


எந்த நேரத்தில் எவருக்கு என்ன நடக்கும் என்பதை ஊகிக்க முடியாது. எப்போதும், எவரும், என்ன விதமாகவும் கொல்லப்படுவார்கள். காலையில் கண்டு கதைத்துவிட்டுப் போனவர், மதியத்திற்குள் கழுத்தறுபட்டுக் கிடப்பார். கொல்லப்படுவதற்குக் காரணங்கள் சொல்லப் படுவதில்லை. வேறிடமென்றால் செத்துக்கிடக்கும் தெரு நாயை அப்புறப்படுத்தக்கூட ஆளிருக்கும். ஆனால் இங்கு... ஊரோரம் இரண்டு உடல்கள் கிடப்பதை எல்லோரும் காணுவார்கள். நரி, காகம், நாய்கூடத் தின்றுவிட்டுப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்புலிகள்

## நூல் மதிப்பீடு

வே. பாலகுமாரன்




விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினரால் அண்மையில் வெளியிடப்பட்ட கடற்புலிகள் நூலைக் கற்றபின் ('வாசித்தல்' என்பது இங்கே பொருந்தாதுபோல் தோற்றுகின்றது), ஒரு வேறுபட்ட அனுபவம் எவர்க்குள்ளும் துளிர்விடும்.

எண்பத்தொன்பது பக்கங்களில் அழகான – தெளிவான – புகைப்படங்களோடு எத்தனை செய்திகள்!

கடற்புலிகளின் வரலாற்றினைக் கூறும் ஆவணமாக, கடற்கரும்புலிகளின் மகத்தான ஈகங்களைப் பதிவுசெய்யும் பதிவேடாக, அவர்களின் உள்ளத்துணர்வுகளை வெளிப்படுத்தும் இலக்கியமாக, எதிரியின் கடற்படைகுறித்து பல்வேறு தகவல்களைக் கொண்ட தகவலேடாக 'கடற்புலிகள்' நூல் அமைந்துள்ளது.

இந்நூலை வாசித்து முடித்ததும் எவர்மனதிலும் எம்மவரின் இறந்தகாலப் பெருமைகளை மீட்கும் நினைவலைகளையும், எதிர்காலத்தில் விடியப்போகும் தமிழீழம் பற்றிய கடல்சார் கற்பனையையும் உதிக்கச்செய்யும்.

உலகிலேயே எந்த ஒரு போராட்ட அமைப்பின் தலைவனும் சிந்திக்காத அல்லது சிந்திக்க முடியாதிருந்த ஒரு போராட்டத் துறை – இன்று எமது தலைவனால் செயல்வடிவமாக்கப்பட்டு – 'கடற்புலிகள்' என மக்கள் கண்முன் காட்சி தருகின்றது. எனவே இப்போது தமிழீழத் தமிழன் பெருமை கொள்ளும் வகையில் அவனது காவல் படையணியாக, கடலிலே காவியம் படைக்கும் கடற்புலிகளின் எழுச்சி திகழ்கின்றது.

தமிழீழத்தின் புவியியல் சார் அமைவிடத்தின் நுணுக்கமான அடிப்படைத் தகவல்கள் இந்நூல் முழுவதும் விரவி, ஆங்காங்கே ஒளிக்கீற்றுக்களாகத் தெறிக்கின்றன.

''புவியியல்ரீதியாக தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப்போயுள்ளது'' என்ற தலைவரின் நிதர்சனமான சிந்தனையோடு தொடங்கி, ''பலர் நினைப்பது போல எமது பாரம்பரிய வாழிடமான நிலப்பகுதி மட்டும்தான் தமிழர் தாயகம் அல்ல'' என்பதை விளக்கி, ''தரையுத்தம் போலல்லாது கடற்போர் வித்தியாசமானது'' என்று, கடற்போரின் கடுமையான பக்கங்களையும் இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

''எல்லையற்றதாக விரிந்து கிடக்கும் கடற்பரப்பில், எந்த நேரத்தில் எந்த முனையிலிருந்து எதிரி தலையெடுப்பான் என்று அனுமானிப்பது கடினம்'', ''இருள் கவிந்து கொண்டதும் பாதையும் புலப்படாது திசையும் புரியாது'' என கடலின் அபாயத்தைப் புலப்படுத்தி, ''எமது போராளிகள் கடற்போர்க்கலையில் வல்லவர்கள்; அபாரதுணிச்சல் கொண்டவர்கள். எமது துணிவிற்கே எதிரி பயப்படுகின்றான்'' என, தளபதி சூசையின் புன்சிரிப்பு பொதிந்த கூற்றாக நூல் விளக்கும் செய்திகள் அநேகம்.

இவை எல்லாவற்றையும் விட ''கடலோடு கரைந்த கரும்புலிகள்'', ''ஓயாத அலைகளில் எழுதிய காவியம்'', ''கடலிலே கலந்த கவிதை'' என்ற தலைப்புகளிலான கடற் போராளிகளின் வரலாறுகள், வரைஓவியம் போல் அமைகின்றன. போரிலக்கியத்தின் ஒரு புது யுக்தியாக இவை எழுதப்பட்டுள்ள விதம் கூர்ந்து நோக்கப்பட வேண்டியதே.

மாவீரர்களின் பெற்றோர்களிடமும் உற்றார்களிடமும் மற்றும் சக போராளி நண்பர்களிடமிருந்தும் தகவல்களைத் திரட்டி, அதேசமயம் அவர்களையே அந்த வரலாற்றின் சாட்சியங்களாக்கி, எழுதுவோரும் தம்மையறியாமல் தம்மையும் ஒரு உணர்வுப் பாத்திரமாக்கி; தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவிடங்களிலும் சஞ்சரிக்கும் ஒரு புதிய ஆற்றொழுக்கைப் போன்ற எழுத்து நடையோடு இவை அமைவது, அற்புதமாயுள்ளது!

இனிமேல் எம்மக்கள், வீரத்திற்கும் விவேகத்திற்கும் ஈகத்திற்கும் முன்னுதாரணம் காட்ட அரிச்சந்திரனிடமோ, அருச்சுனனிடமோ, கர்ணனிடமோ போகத் தேவையில்லை. இந்த மாவீரர்களைத் தவிர வேறெவர் எடுத்துக்காட்டுகளாக அமைய முடியும்?

இவ்விடத்திலே, எமதுதேசத்தின் புவிசார் அமைவிடத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை அழுத்திச் சொல்லவேண்டியுள்ளது. இது பழம் பெருமை பீற்றல் அல்ல; கடற்புலிகளின் எதிர்கால இன்றியமையாமையைப் புரிதலும் ஆகும். அத்தோடு, விடியப்போகும் எமது தேசத்தின் இரு கண்களாக அமையப்போகும் வேளாண்மையினதும் கடல்சார் தொழில்களினதும் முக்கியமும், அதற்கு உறுதுணையாக அமையப் போகும் எமது நவீன அறிவியல்சார் தொழில்அறிவும் எவ்வளவு அவசியம் என்பது, எவர் மனதிலும் படமாக விரியும்.

இற்றைக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னே சீன, உரோம, சேர, சோழ, பாண்டியர் தொடர்புடைய சர்வதேச வர்த்தகமையமாக மாந்தை திகழ்ந்தது அல்லவா?

பாக்குநீரிணை – மன்னார்க் குடாக்கடல் எந்நேரமும் போக்குவரத்து நடந்த கடல் வழிப் பாதையல்லவா!

அண்மைக்காலத்தில் 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதிக்கு முன்னர் காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தலைமன்னார், பேசாலை, விடத்தல்தீவு, முல்லைத்தீவு என்பன மிகமுக்கியத்துவம் பெற்றிருந்த துறைகள். 1940 இற்கு முன், கொழும்புக்கு அடுத்தபடியாக ஊர்காவற்றுறையே அதிக வருவாய் ஈட்டித்தரும் துறைமுகமாக இருந்தது.


எனவே இந்தியாவுக்கும், சிங்களத்துக்கும், தென்கிழக்காசியாவுக்கும் எம்மவர் கடல் மூலமே தொடர்பு கொண்டனர். கடற்புலிகளின் எழுச்சி எதிர்காலத்தில் எத்தகைய பாத்திரத்தை வகிக்கப்போகின்றது என்பதை அறிய, இந்த விடயங்களும் சிறந்ததாகவே இருக்கும்.

இன்னொரு செய்தியும் இங்கே சுட்டிக்காட்டப்பட வேண்டும். அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் வெளியீடுகளை அவதானிப்போர், அவற்றின் உள்ளே முதன்மைச் செய்தியொன்று புலப்படுமென அறிந்திருப்பர். எமது போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களை, பெரும்பாலோர் அறிந்திருக்கமுடியாத எமது போராளிகளின் அடியுள்ளத்து உணர்வுகளை, வியத்தகு இராணுவ செயற்பாடுகளின் விந்தைமிகு தகவல்களை, இராணுவ உத்திகளை, ஆயுதங்கள் பற்றிய விளக்கங்களைக் கற்பதில் இன்று மக்கள் ஆர்வம் காட்டுகின்றார்கள். போரிலக்கியத்தின் இன்னொரு வெளிப்பாடு இது. அந்தவகையில் 'கடற்புலிகள்' நூலின் பங்கு கணிசமானது. மக்கள் எல்லோரும் குறிப்பாக இளம்பருவத்தினர் வாசிக்க வேண்டிய சுவையான – அறிவான – இலக்கியநயம் மிகுந்த – நூல் இது. ○

---

## தமிழினத்தின் தலைவர் என்றால் அவர் வேலுப்பிள்ளை பிரபாகரனேதான்!

— பேராசிரியர் இரா. நா.வீரப்பன்



''தமிழர்களாகிய எமக்கு ஒரு நாடு வேண்டும். அதற்காகத் தமிழீழத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் போராடிப் பல தியாகங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழர்களின் பிரச்சினையை சர்வதேச அரங்கில் கொண்டு வந்தவர்கள் விடுதலைப் புலிகளே. அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்தான் தமிழினத்தின் தலைவர் என்பதை நான் உறுதியாகச் சொல்வேன். உலகில் வாழும் தமிழர்களாகிய எம்மை வழிநடத்துகின்றவரும், எமக்கு வழிகாட்டக்கூடியவரும் அவர்தான்.''

இவ்வாறு 'உலகத் தமிழர்கள் இயக்கக் கல்விச்சேவை'யின் மூன்றாவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, மலேசிய உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் பேராசிரியர் இரா. நா. வீரப்பன் அவர்கள் பேசிய போது, மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் ஒருமித்து கரகோஷம் செய்து வரவேற்றது. அவர் தொடர்ந்து பேசுகையில், ''பேர்லினில் நடந்த தமிழுறவு மகாநாட்டில் நான் கலந்துகொண்டபோது இந்தியாவிலிருந்து அங்கு வந்த அறிஞர்களைப் பார்த்துக் கேட்டேன். ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த தமிழ் அறிஞர் பெருஞ்சித்திரனார் உட்பட பலரைச் சிறையில் வைத்துவிட்டு, இங்கு தமிழ் மொழி பற்றி மகாநாடு நடத்த வந்திருக்கிறீர்களே, உங்களுக்குமனச்சாட்சி உறுத்தவில்லையா என்றேன். அம்மகாநாட்டில் தமிழீழத்தையும் அதன் விடுதலைப் போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என வற்புறுத்தினேன்; அதனை அங்கீகரித்து தீர்மானம் கொண்டுவரவும் செய்தேன்.''

நன்றி: களத்தில்
10.09.93

இருள் மௌனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு அது ஒரு பொருட்டல்ல. துளம்புச் சனியன் கை, கால், மூஞ்சி .... ஆ .. ச்சீ குத்திக்குத்தி மனுசற்றை உயிரை எடுக்கும். கை அடிக்க ... பற்கள் குளிரில் கிட்டிக் கொள்ளும். வயிற்றுக்குள் குளிர் பந்தாகச் சுருட்டி உள்ளுறுப்புகள் நடுங்கும் குளிர். ஆனால்......?

ஆ...... ச்...... ஐயோ தும்மல் வாய்பிளந்து மூக்குளைஞ்சு...... ஆ .. ச் ..... தும்மக்கூடாது; இல்லை நிச்சயம் அடக்கியபடி......

பாம்பு ஒன்று நொளுநொளெண்டு வளுவளுத்தபடி முதுகாலை வழிய .... ஆட்டி விழுத்தலாம்... ? உடல் கூசி..... ஐயோ அசையக் கூடாதே! அசைஞ்சா? அசையக்கூடாது அவ்வளவுதான்!

பசியோடு தாகம் ..... விழி நித்திரைக்கு யாசிக்கும். விழித்திரு...... விழித்திரு உனக்கு நிறைய விடயம் தேவை நிறையப் பொறுமை தேவை.

அந்த இருளில் நிழலோடு நிழலாய்...... கருமையோடு கருமையாய் ஒ! எங்கள் துளசிராவும் அதில் பச்சையாய் - அந்தப் பெண் வேவுப்புலி கண்கள் சுழல .... காதுகள் தீட்டியபடி எதை எதைப் பார்க்கும்? எதிரியின் நகர்வு, ஆயுதம்...... எல்லாமே தேவை அவளுக்கு. அது முக்கியமான தும்கூட. மீண்டும் ஊர்ந்து...... அட எப்படி முடிந்தது இவளால் இவ்வளவு துரிதமாய்......? ஆச்சரியம் தரும் பெண் துளசிரா.

ஆழ்ந்து சதா சிந்திக்கும் கண்கள். சற்றுக் கோபத்தைப் பூசிய மிடுக்கான முகம். அன்பு இதயத்தில் இருந்தும் வார்த்தைகளில் கடுமை பூசி அனுப்பும் துளசி, எதையோ எழுதியபடி...... எதையோ தோழிகளுடன் பகிர்ந்தபடி ...... எதையோ வாசித்த...... எதையோ அல்ல, வீரமும் தியாகமும் நிறைந்த கியூபாப் புரட்சி வீரன் 'சேகுவேரா' பற்றியோ அல்லது கரிபால்டி, லெனின்...... இந்த வரிசையில் அமைந்த புத்தகங்களில் வரும் மனதைத் தொடும் சம்பவங்கள், வாக்கியங்கள்...... சகதோழியருடன் பகிர்ந்தபடி.... ஒ! அது எங்கள் துளசிராவால் முடியும். அது அவளேதான்.

பாயா?'' மானசீக உரையாடல் அது. நட்சத்திரம் இவளை அமைதியாய்ப் பார்த்துக் கண்வெட்டும், ஆறுதல் அளிக்கும் - இவள் கவிஞை என்பதால் . ...

துளசிரா எனும் தாமரைச்செல்வியை (இயற்பெயர்) கால்கொஞ்சி அரவணைத்து மகிழ்ந்திருக்க, 1974.08.17 அன்று அவள் அழகைப் பார்த்துப் பார்த்து ரசித்த சின்னமணி தவமணி மலைத்து நின்ற நாளாய், அவள் பிறந்தாள். செங்கதிரவன் முகம் பார்க்கும்போது சீண்டும் கடலையும், வானத்து நீலத்தைப் பார்த்தபடி நிமிர்ந்த பனைகளும், மணல் திடல் அராபியப் பிரமைதரும் அந்த வடமராட்சியின் கிழக்குப் பிரதேசமான வல்லிபுரக்குறிச்சி கிராமம் இவளை புதுப் பிரஜையாகச் சேர்த்துக்கொண்டது.

சிறிது காலத்தின் பின், பசுமை படுத்திருந்து சிரிக்கும் கிளிநொச்சியின் 3ஆம் வாய்க்காலில் உன் சிறிய குடும்பம் குடியேறியது. உன்னுடன் ஓடிப்பிடித்து விளையாடி குதூகலித்திருக்க இரு தங்கை ஒரு தம்பி...... என்ன இனிமையானவை இந்த நாட்கள்! அப்பாவின் தோள்களில் தூங்கி ... அப்பாவுடன் நொடுநொடுத்து, ஆயிரம் கேள்விகள் கேட்டு......

அம்மாவின் குங்குமமும் அவர்கள் சந்தோசம் அத்தனையும் வழித்தெடுத்தபடி. அவள் அப்பா 1989 இல் காலமானார், அப்பாவைத் தழுவி மாலைபோட்டு சந்தனம் சாத்தி...... அம்மா, அவள் தான் அவ்வளவு துன்பத்தையும் தாங்கியவள். ''என்னை, தன்ரை கஸ்டத்தின் விடிவெள்ளியாய் நினைத்து கனவு நிறைச்சு ஏங்கியபடி ....'' என கலங்கி உரைத்து மௌனித்தமும் துளசிரா.

''அப்ப துளசி ஏன் இயக்கத்துக்கு நீங்கள்......?'' என வினவினால், ''சீ, அது எனது கடமை. எனக்கு வீட்டுக் கஸ்டத்தைவிட நாடு......'' தொடரும் அவளது உறுதி. ''ஆனா தங்கைச்சியும் என்னைப்போலவே...... அதனால் சந்தோசம். அவள் இறுதிவரை போராடவேணும். இது என்ரை விருப்பம் ..... ஏன் கடைசி, விருப்பமும்கூட'' எனக் கூறும் துளசிரா......

தங்கைக்கு உணர்வும் அனுபவமும் பகிரும் கடிதங்கள்...... ஓ துளசி, நீ வித்தியாசமானவள் தான். அந்த மௌனத்தில் எத்தனை அர்த்தங்கள் அம்மா!

குளித்து பலநாள்கூட இருக்கலாம். எத்தனை இரவுகள் நித்திரை இழந்து சிவந்து போன கண்கள். அலுப்பற்ற தொடர் பயணம். ஊர்ந்து......நடந்து......கிடந்து .....மறைந்து...... அவன் 'அசிங்கங்களின்' மேல் படுத்தபடிகூட எடுத்த தகவல்கள். பகலில் அவற்றின் சாயல்கூட இன்றி துறுதுறுத்தபடி துளசி... ..உன்னால் எப்படி இவற்றைத் தாங்க முடிந்தது? அதுவும் அறுவையும் சிரிப்புமாக......எம் துளசியே உன்னை இழந்துவிட்டோமா நாம்? ஏக்கம் இதயத்தில் வந்தமர்ந்தது.


எத்தனை தடவை துளசியும் குழுவும் அதிர்ச்சியான சம்பவங்களை அலுக்காமல் அனுபவித்து வரும்! நீண்ட நாள் எதிரியின் எல்லையுள்...... இரவில் தம்வீட்டு முற்றத்தில் திரியும் இரவுப் பிசாசுகள்போல்..... கண்கள் சுழன்று ..... காதுகள் திரும்பி ஒலி சேகரிக்கும். இரவில் எதையோ தேடும்...... அது தடயமாக...... எதிரியின் நடவடிக்கையாய்...... அவனின் ஆயு...... மொத்தத்தில் எல்லாமே உனக்குத் தேவை. உன் தகவல் சேகரிப்பும் துணிவும் உன்னை சண்டைக்கான சிறந்த வழிகாட்டியாக்கியது உண்மை. அதனால்தான் உன்னை பத்தமேனிச் சண்டையில், உன் நகர்வு...... மிகவும் நுணுக்கமான உன் போர்த் தந்திரம்......பொறுமை, கண்ணில் காயமுற்ற போதும் நீ மற்றவர்களுக்கு உதவிய உன் பண்பு, தாங்கும் தன்மை......நீ வேவுப்புலிதான்; அதுவும் பெண்புலி.

கம்பிவேலி தாண்டும் இவர்கள் பாதங்களில் ஒன்றை எதிரி கண்ணிவெடி பதம் பார்க்கும். இழுத்தபடி......அல்லது உயிரைத் தியாகம் செய்யும் அந்தப் புனித யுவதிகளாய்...... கண்ணும் மனமும் பலநாள் பார்த்திருக்கும் எதிர்பாராமல் அது நடந்தது. 'அட விசரன் மாதிரி 'போக்கஸ்' அடிக்கிறான்.' கிட்டக் கிட்ட இவர்களுக்கு அண்மையில் அவன் அட! பத்து யார் இருக்குமா? இல்லை! மூன்று நாலு யார்... அசையாமல் இறுகியபடி...... அப்பாடி! அங்காலை? 'அசிங்கம்' பண்ணியவன் மீண்டபோது, இதயமும் மூச்சும் இயங்கும். ஒருவேளை அவன் கண்டால் சிதறும்

# கப்டன் துளசிரா!

## மீண்டும் உன்னுடன் பகிர்வதற்காய் நிறைய

- சீத்தா



'' தத் தெய்தாம் தித் தெய்தாம்'' ஜதியின் ஒலியில் நனைந்தபடி நீ ஆசானாய் அபிநயித்தபடி ..... உன் தோழியர் ஆர்வத்துடன் பழகியபடி......

''இவளது இன்பங்கள் தொலைந்தது யாரால்?'' - கவிதை முழங்கும். திரும்பிப் பார்த்தால், அட...... நம்மடை துளசிரா.

''பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர்......?'' கேள்விகள் தொடர்வது அதுவும் எங்கட துளசிராதான்.

வேவு நேரத்தில், '' மூதேவி மாதிரிக் கிட்ட வாரன் அசையாதை'' எனக்கூறி, தனியாக தான் மட்டும் முன்னால் ஊர்ந்து ஊர்ந்து...... தோழியின் காதில் கிசுகிசுப்பாய் கூறியவள் முன்பக்கம் கிடப்பாள்.

ஒரு நாள் சாப்பாடு சரியாக வராததால் அவர்கள் அனைவரும் சோர்ந்தபடி...... ''என்ன விசரப்பா மனுசனுக்குப் பசிக்குது.'' சிணுங்கிய அந்தச் சிறியவளை துளசி அழைத்து பசிக்குதா? பசியை நினைக்காதையுங்கோ...... வேவுப் புலிகள் இப்படிச் சோரக்கூடாது. மனதைத் தைரியப்படுத்துங்கோ. அண்ணாவை நினையுங்கோ. எவ்வளவு கஸ்டம் துன்பம் ...'' தொடரும் அவளது வார்த்தைகள், பசியை மட்டுமல்ல சோர்வையும் விரட்டும் தன்மைவாய்ந்தவை. துளசி, உன்னால் எப்படி முடிந்தது? நீ வாழ்க்கையில் நிறைய அனுபவங்கள் கண்டவள்போல்...... இனி யார்? இபபடி அவர்களுடன் கதைச்சு......?

கரிபால்டியையும், கியூபாப் புரட்சியின் ஆன்மார்த்த உணர்வைத் தட்டும் சம்பவங்களையும் கோர்வையாய்க் கண்கள் மின்ன மின்னச் சொல்லும் துளசிரா நீயா......? சோர்ந்துபோகும் தருணம் விழி ஏங்கி...... முகம் வானம்பார்த்து......

ஓ துளசி! நீ நினைப்பது......

''அம்மா, என்ரை குஞ்சம்மா; என்னை மன்னி, நீ சீவியத்துக்கு என்ன செய்வாய்? எனக்குத் தெரியும் உன் கஸ்டம். ஆனால் ...'' ......கண்கள் பனித்து பெருமூச்செறிவாய். மீண்டும் உன் நினைவு தொடரும்......

''நிமிர்ந்திரு அம்மா. உன் பிள்ளைகள் இருவர் போராட்டத்தில் ...... என்னை மன்னிப்

துளசிராவைப் புதுப்போராளியாக மாற்றியது அந்தக் காடு. 13ஆவது பயிற்சி முகாம் அது. அவள் படுத்திருந்து 'நிலை' எடுத்த மரம், பதுங்கித் தாக்குதலுக்காய் படுத்திருந்த அந்தப் புல்வெளி...... அவள் படுத்தபடி நிமிர்ந்து பார்த்து கற்பனையில் மிதக்கும் அந்தச் சிறு குடில்...... மரங்களின் இடையில் சிரிக்கும் அந்த நட்சத்திரம்...... எல்லாம் அவளுக்கு அடிக்கடி கியூபாப் போராட்டத்தை நினைவுபடுத்துவதாய் .. முழுப் போராளியாய் திறமையும் ஊக்கமுமாக, துளசி எதிரியுடன் யுத்தமாட ஆரம்பித்தாள்.

மாங்குளம் எம்மவர் கைகளில் வீழ்ந்த பின் அதைப் பாதுகாக்கும் குழுவுடன் இவளும்......

ஆ. க. வெ. தாக்குதலில் எதிரியின் அங்குல நகர்வுக்கும் பதிலடி கொடுத்த பெண்புலி அணியில், இவளும் மிகவும் மூர்க்கமாக......

'மின்னல்' - எங்கள் இதயபூமியில் தாண்டவமாடிய எதிரி நடவடிக்கையில் எதிரியைக் காலொடித்து விரட்டியவர்களில் இவளும் முன்னணியில்......

எதில் நீ உன் திறமையைக் காட்டவில்லை? 'மின்னலில்' காலில் காயமுற்ற நீ சிறுகால ஓய்வுக்குப் பின் -

வேவுப்புலியாய், அப்பப்பா இவளுக்கு எத்தனை அனுபவங்கள்...... மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்து...... இருளில் இருளாக ..... இலையாகி சருகாகி...... கட்டையாகி...... ஏதோ ஏதோவெல்லாம் இவர்களால் எப்படி? ஓ, இவர்கள் வேவுப்புலிகள். எத்தனை சகிப்புத்தன்மை வேண்டுமே இவற்றுக்கு. துளசி, உன்னிடம் அது நிறைந்திருந்தது, உன் விழிச்சிவப்பு அது கூறும்.

இரவு தரும் தனிமை. அந்த மௌனம் தரும் பயங்கரம். கட்டைகள் எதிரியாகி உருவகிக்கும். பயம் தரும் உருவமாக...... திக்கென்று இதயம் அடித்துக்கொள்ளும். இதயம் கழன்றுவிழும் போல்...... அந்த சரசரச் சத்தம். ஒருவேளை அந்த இழவுவிழுவானோ? கிட்டக்கிட்ட அண்மிக்கும் அந்தச் சத்தம், 'சடார்'... இதயம் லப்டப் லப்ட...ப்.. ... நின்றுவிடும்போல் உதறிக்கொள்ளும்,அந்த 'அரியண்ட' உணர்வு. இது சாதாரணமாய் ஏற்படும் அனுபவம். இதை இவளும் இவள் தோழிகளும் நிதானமுடனும் மிகுந்த சகிப்புத்தன்மையுடனும் பிரிததறிந்து, அலுக்காமல் இருக்கும் உறுதி துளசி, நீ இதில் ஊறியவள்.

உடல், சிவந்த தசைத் துகள்களாக்கிக் கொள்ளும் தியாகம். துளசிரா, நீ எத்தனை இரவை இப்படிச் சந்தித்திருப்பாய்! இவை உன்னைப் பாதிப்பதில்லை. நீ ஓர் திறமையான வேவுப்புலி; அதிலும் பெண்களில் தன்மானம் கூடியவள் நீ.

இவர்கள் மாயப் பிசாசுகள் போல் திரிவது எதிரியின் கண்ணிவெடி விதைத்த வயல்களுக்குள்தான். அதில் பாதை அமைத்து மரணத்தை இருமருங்கிலும் ஒதுக்கிச் செல்லும் துணிவு மிக்கவர்கள்.

இவ்வளவும், இவளை பூநகரிக்கும் வேவுப் பணிக்கு அமர்த்தக் காரணமாய் அமைந்தன. கால்கள் நடந்தன; கண்கள் துருவின; கைகள் ஸ்பரிசித்தன: காதுகள் கேட்டன. இருளிலும் தேடிய மறைந்து கிடந்த எதிரியின் அத்தனை விடயமும் தகவல்களாக......அவை சண்டையாக உருவகம் பெற்று நிமிர்ந்து நின்றது துளசிபோல்.

''அங்கைபார் இந்த 'போக்கஸ் லைற்' சண்டை முடிந்து திரும்ப நாம் வரும்போது மானமிழந்துவிடும்.'' எத்தனை கனவடி உன் கண்களில். ஏன் திரும்பி அதை நீ பார்க்காமலே......உனை நாம் இழந்துவிட்டோமே துளசிரா.

பூநகரியில் - அந்த ஜில்லித்துப்போன பனித்த இரவு. படையணிகள் பல அணிகளாய் நகர்வதில் .... ஒரு அணிக்கு இவள் பாதைகாட்டி நகர்ந்தாள். உறுதியான உன் நகர்வும் உன் நாவு சொன்னதுபோல் சரியான வெளி. அவ்விடத்தை அடைந்தது அணி கம்பிக்கட்டுக்கு நீ வைத்த 'டோபிடோ' காலைவாரியதால் ஒன்றும் பிசகி நிற்கவில்லை; மாறாய், மாற்றுவழி தேடியது உன் கூர்மதி. கைகால் அத்தனை துரிதமாய், வேகமான பெண்ணாய் இயங்கிய உன் யுத்த அறிவு, அத்தனை 'பொயின்ற்றும்' 'கிளியர்' பண்ணியது உனது கிரனேற்றுகள், பாதையமைத்து

(11 ஆம் பக்கம் பார்க்க)

# படை, அரண், நாடு!

வானத்தில் தூண்டில் போட முயன்றேன்.

"வேண்டாம் மகனே" என்றார் வள்ளுவர். அவர் சாதாரண மனிதராகவே இருந்தார். சாந்தமும் தெளிவும் இருப்பதைப் போல அவரது தோற்றத்தில் உலகின் பட்டுணர்வை அறிந்த உறுதியும் தெரிந்தது.

சில பெரியோர்களின் முன் நிற்கும் போது எழும் 'மனப் பயம்' இங்கு எனக்கு எழவில்லை! இன்னும் சொல்லின், 'நானும் ஒரு மனிதன்தான்' எனக் கூறி நிற்கும் தோற்றம் அது!

என் மனம் தெளிவாகக் கேட்க இசைந்தது. ஆனால் அந்த இன்முகம் என்னை வேதனையோடு பார்த்தது.

'தங்களுக்கு என்ன வேதனை?' என என் உள்ளத்தால் கேட்டுவிட்டேன் போலும்!

"எனது வேதனை உங்கள் எல்லோரையும் எண்ணியதால் வந்ததே" என்றார் வள்ளுவப் பெருந்தகையார்.

"உங்கள் விளக்கமின்மையை, செயலின்மையை, துணிவின்மையை, எண்ணி எழும் வாட்டமே வருத்துகிறது" என, மேலும் விளக்கினார் எம் வள்ளல்.

"ஏன்? 'அன்பும் அறனும்' எனும் திருக்குறள் இன்று எங்கள் வீடுகளில் தொங்குகின்றன. வாகனங்களிற் குறள். வர்த்தக நிலையங்களிற் குறள். சிறு ஏடுகளிலிருந்து பெரும் மாநாடுகள் வரை எங்கும் குறள்" எனத் தொடங்கினேன் நான்.

"தங்கள் திருக்குறளின் உயர் நீதி நெறிகளை உலகம் முழுதிற்கும்......"

இந்த இடத்தில் வள்ளுவனார் "போதும்" என என் பேச்சை நிறுத்தினார்!

"திருக்குறள் ஒரு நீதி நூல் மட்டுமா?" எனத் தனது வேதனைக் குரலை உயர்த்தினார் அவர்.

நான் திகைத்து நின்றேன். திருக்குறள் வேறு எதைக் கூறுகிறது என, என்னுள் குழம்பி நின்றேன்.

"அஞ்சி வாழாதே! அடிமைப்பட்டு வாழாதே என்பது குறள்! துன்பம் தர வருபவனுக்கு நீ துன்பம் கொடு என்பது குறள்! சோம்பி இராதே! எதுவும் இல்லையே என ஏங்கி இராதே! நிலம் எனும் தாய் உனக்கு அனைத்தையும் தர உள்ளாள், என்பது குறள்! இவற்றை ஏன் நீங்கள் பார்ப்பது இல்லை?" என்றார் வள்ளுவனார்!

என் உள்ளம் விழிப்பது தெரிந்தது.

"நாடு பற்றிக் கூறினேன். ஏருடன் போரையும் கூறினேன். இதை ஏன் நீங்கள் பார்ப்பதில்லை?" எனத் தொடர்ந்தார் பெருந்தகையார்.

போர் என்ற வீரம் இருந்திராவிட்டால் அன்றைய இதிகாசங்களெங்கே? அரசனை எதிர்த்தெழும் போர்க்குணம் கண்ணகியில் இருந்திராவிட்டால் சிலம்பின் கதை எங்கே என, எனது உள்ளம் இதனிடையே வியந்துகொண்டிருந்தது!

"கவனித்துக் கேள்" எனக் கடிந்தார் பெருந்தகையார். அதிலும் கருணை இருந்தது.

"நீங்கள் கூறும் 'பொருட்பால்' எனும் பகுதியில் நான் முதலில் இருத்தியது எதனை? 'இறைமாட்சி' என அரசனின் - அதாவது அரசியலின் - தேவைகளையே!

நாட்டுக்கு வேண்டியது மக்களும் கூழ் எனும் உணவும் மட்டுமல்ல. அறிவுரைக்கான அமைச்சும் நட்பு நாடுகளும் மட்டுமல்ல! நாட்டுக்குப் படை தேவை. பலம்கொண்ட அரண் தேவை! இதுவே அந்த முதற்குறளின் முதற் சொல்!" என முழங்கிற்று அந்த முன்னையனின் குரல்.

"துணிவில்லாதவனுக்கு நாடில்லை!
தெளிவு, துணிவுடைமை, அஞ்சாமை!

- இவையும் குறளின் உயிர் மூச்சே!" எனத் தொடர்ந்து முழங்கினார் அந்த மாமேதை.

வானம் அடங்கி நின்றது.

- எம் தலைவன் வகுக்கும் செயலும் இதுவே என, ஒன்று உணர்த்திக்கொண்டிருந்தது.

இதனை அறிந்து துணைதரவே வள்ளுவப் பெருந்தகையும் இங்கு வந்தாரோ?

— நாக. பத்மநாதன் ○

# இரத்தமும், தசையும்,...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போகும். ஆனால், யாரும் தொடமுடியாது. உரித்தானவர்கள் மட்டுமே எடுத்துச்சென்று, வீட்டார் மட்டுமே சடங்கு செய்து, ஊரார் கூடாமல் அடக்கம் செய்ய வேண்டும். பக்கத்து வீட்டுக்காரர் எட்டிப்பார்த்தால்கூட, "இந்தக் கண்ணாலதானே பார்த்தாய்" என்று தோண்டி எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்; அல்லது "இந்தக் கையாலதானே தூக்கினாய்" என்று வெட்டிக்கொண்டு போய்விடுவார்கள்.

"பொம்பிளைப் பிள்ளையள வீடுகளில வைச்சிருக்கிறதைப் போல பயங்கரம் வேறையில்ல மகன் ... அது பெரிய சிரழிவு" என்று சினந்துகொண்டார், பெரிய கல்லாறைச் சேர்ந்த, இரண்டு பெண் போராளிகளின் தாய் ஒருவர்.

பாடசாலை முடிகிற நேரம் இலக்கத்தகடில்லாத ஒரு வெள்ளை நிற 'வான்' வீதிக்கு வரும். சிங்கள - முஸ்லிம் ஆயுதபாணிகளோடு துரோகக் கும்பல் ஆட்களும் உள்ளே இருப்பார்கள். பள்ளிக்கூடத்திலிருந்து வீடு செல்லும் பெண்பிள்ளைகள் தெரிவுசெய்து தூக்கிப் போடப்படுவார்கள். வீதியால் வரும் இளவயதுப் பெண்களைப் பார்த்து, முகாம்களின் வாசலில் பல்லிளித்துக்கொண்டு நிற்கும் கூட்டம் - நள்ளிரவில் வீடுகளுக்குள் புகுந்து இழுத்துக்கொண்டு போகும். வீதிச் சோதனைக்காக நிறுத்தப்படும் பயணி ஊர்திகளிலிருந்து பெண்கள் இழுத்திறக்கப்படுவார்கள். இவற்றுக்கெல்லாம் - ஏன்? எதற்கு? எங்கே? என்ற கேள்விகளுக்கு இடமில்லை. அப்படிக் கொண்டுசெல்லப்படுபவர்களில் அநேகமானவர்கள் வருவதில்லை; வந்தவர்களுக்கு மனநிலை சரியில்லை. இன்னும் சிலர் - உடைகளற்ற உடலில் நகங்களும், பற்களும் பதிந்த கொடூரமான காயங்களோடு - ஊருக்கு வெளியே உயிரற்று மீட்கப்பட்டார்கள்.

பெற்றவர்களுக்கு முன்னால், கணவன்மார்களுக்கு முன்னால், உடன் பிறந்தவர்களுக்கு முன்னால், ஊரவர்களுக்கு முன்னால்கூட, காடையர் கூட்டத்தின் காம வெறிக்குப் பலியாக்கப்பட்ட பெண்பிள்ளைகள் பலர். வெலுக்காக் கண்டிக்கு அருகில் மூங்கில்மலை சுற்றிவளைக்கப்பட்டபோது, திருமணமாகி ஒரு வாரம்கூட ஆகியிருக்காத சின்னவன் - கமலா தம்பதிகளில், கணவனுக்கு முன்னால் மனைவிக்கு நடந்தது, அவற்றுள் ஒரு சம்பவம்.

தென் தமிழீழத்தின் ஒவ்வொரு அங்குல நிலத்திலும், மிகப் பெரிய துயரம் படிந்து கிடக்கின்றது. அங்கு வாழும் ஒவ்வொரு தமிழனுக்குப் பின்னாலும், சொல்லில் அடங்காத சோகம் இருக்கின்றது.

மன்னம்பிட்டியிலிருந்து வெள்ளை வானில் ஏற்றிச் செல்லப்பட்டு, உமித்திடலில் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட கணக்கற்ற தமிழர்கள் -

கொக்கட்டிச்சோலை உடும்பன்குளத்தில் - கல்லில் வைத்துப் படுக்கச் சொல்லி, தலையில் பாறாங்கல்லால் அடித்துச் சிதறடிக்கப்பட்ட மூன்று இளைஞர்கள் -

'ரெலோ'க் காரர்கள் பிடித்துக்கொடுத்துப் பார்த்து நிற்க, முஸ்லிம் காடையர்கள் பாலியல் வன்முறையால் உயிர்பிரியச் செய்த, ஆரையம்பதியைச் சேர்ந்த விஜி என்ற 9 ஆம் வகுப்பு மாணவி -

செங்கலடியிலிருந்து புல்லுமலைக்கு நகர்ந்த சிங்களப்படை வெலுக்காக்கண்டிக்குள் நுழைந்த போது, "ஆமி வாறான் .. " என்ற குரல் கேட்டு "ஆமியா... " என ஏங்கிய போது மூச்சு நின்றுபோன பூரணிக்கிழவி -

அக்கரைப்பற்று சின்னப்பள்ளி எனுமிடத்தில், முஸ்லிம்கள் காரில் கட்டி இழுத்து நாராய்க் கிழித்த தனபால் -

பெரியகல்லாறு தேவாலயத்திற்கு முன்னால், சதைக்கும்பமாக வெட்டிக் குவிக்கப்பட்டிருந்த 35 ஆண்களுக்குள் அடங்கிய, இரு கண்களும் பார்வையிழந்த ஒரு தந்தை -

கன்னன்குடாவுக்கு அருகில் கடுக்காமுனை எனும் இடத்தில் கிணற்றுக்குள் இறக்கிவிட்டு, கல்லுகளால் தூக்கி எறிந்தே கொலை செய்யப்பட்ட பேர்தெரியாத 4 இளைஞர்கள் -

ஊரைவிட்டு ஓடும்படி சிங்களப்படை மிரட்டியபோது, காலாதி காலமாக நான் குடியிருந்த நிலத்தை விட்டு - கணவனோடு நான் களித்து வாழ்ந்த குடிசை விட்டு - எழேன் என்றதற்காக, படுத்தபடுக்கையிலேயே சாக்குக் கட்டுகளைப் போட்டு, மண்ணெய் ஊற்றி, குடிசையோடு எரித்துச் சாம்பராக்கப்பட்ட 80 வயது மணி ஆச்சி -

இலுப்பையடிச் சேனையில் திருமணமாகிய அடுத்த நாளே, ஒன்றாகச் சேர்த்துக் கட்டிவிட்டு ரயர் மாலை போட்டுக் கருக்கப்பட்ட புதுத்தம்பதிகள் -

மட்டக்களப்பு நகரிலிருந்து, இலக்கத்தகடில்லாத வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டு, கண்களைத் தோண்டிவிட்டு, சாக்குகளில் கட்டி ஆற்றுக்குள் போடப்பட்ட ஏராளமான மாணவர்கள் -

கல்முனையில் - தாங்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிவிட்டு, நகரின் மத்தியில் உடைகளைந்து நிற்க வைத்து, முஸ்லிம்கள் கற்களால் எறிந்தே தங்கள் மதமுறைத் தண்டனையை நிறைவேற்றிய 16 வயதுச் சிறுமி -

இடித்துக் கொல்லக் கலைத்து வந்த கவச வண்டிக்குத் தப்ப ஓடுகையில், சில்லுக்குள் அகப்பட்ட சேலையை அவிழ்த்துவிட்டும் ஓடும் போது, நடுவீதியிலேயே கவச வண்டியால் துரத்தி ஏற்றி நசுக்கப்பட்ட பாண்டிருப்புப் பாடசாலை ஆசிரியை -

உடும்பன்குளத்தில், புல்லுமலையில், மகிழடித்தீவில், காத்தான்குடியில், அம்பாறை 'சென்ரல் காம்ப்'பில், வீரமுனையில், களுவாஞ்சிக்குடியில், பனிச்சங்கேணியில், முதலிக்குளத்தில், கிளிவெட்டியில், திருக்கோவிலில், சாய்ந்தமருதுவில், சாம்பல்தீவில் என ஒவ்வொரு கிராமத்திலும் - 100, 200, 300 என - கூட்டம் கூட்டமாகவும், சிறுசிறு தொகைகளிலும், தனித்தனியாகவும் படுகொலை செய்து குவிக்கப்பட்ட ஏறக்குறைய 15,000 வரையிலான எமதினிய மக்கள் - இவர்கள் எல்லோரும் எங்கள் தாயகத்துக்கு உரமாகப்போனவர்கள்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு, அதன் தென் பிராந்தியம் செலுத்திய விலை மிகமிக அதிகம்.

படுவான்கரையைச் சேர்ந்தவரும், லொறி ஓட்டுநரும், இரண்டு பிள்ளைகளைப் போராட அனுப்பிவிட்ட தந்தையுமான ஒருவர் கீழே உள்ளதைச் சொன்னார் -

"40 வருடங்களாக நாங்கள் முயற்சி செய்துவிட்டோம்: முடியவில்லை. அதைவிட மேலாக - இந்த நான்கு வருடங்களுக்குள் நிறையத் துன்பப்பட்டுவிட்டோம்; நன்றாகப் படித்துவிட்டோம். இனி எப்போதும் சிங்களவர்களோடு சேர்ந்து வாழ்வதைப்பற்றி நாங்கள் சிந்திக்கவே முடியாது." ○

# துளசிரா...

விரைந்தாய்; சுழன்றாடினாய்; களம் உன்னைப் பார்த்துத் திகைத்தது. உன் திறமையை நெடுக நெடுக உரைத்து நிமிரும் உன் தோழியர் கண் சிவந்தது எதனால் துளசி? உனை இழந்தோமே... .. அதனால்.

உன் கண்களுக்கு தமிழீழத்தைப் பார்க்க ஆசை. ஆனால் நீ இறந்த பின் போராளிக்கு அவற்றை அளிக்கச்சொன்ன உன் நிமிர்வு, அண்ணாவை நினைவுகூர்ந்து பளபளக்கும் அந்தக் கண், வீட்டின் வறுமையில் வாடிச் சிவந்த அந்தக் கண். அறிவினில் ஜொலித்திருக்கும் உன் கண்கள். துளசி, நீ நிறையத்தான் கனவு சுமந்து நடந்தாய் பூநகரிக்கு. நினைவு இழந்து உயிரிழந்த உன் உடல்...... அதே நிமிர்வுடன்தான் துளசி இருந்தது.

'போக்கஸ் லைற்' இல்லை. உன் நினைவு போல் பூநகரி வீழ்ந்தது. எத்தனை உறுதியுடன் கூறிநின்றாய் துளசி!

இறுதிக் கணத்திலும் உன் இனிய இதயம் அந்தப் பாடலை ஏன் கேட்டது?

காற்றே நீயும்தானே பார்த்தாய் அவள் அழுததை. ஏன்...... ஏன் அழுதாள்?

சாவுக்கு நீயே தேதி குறித்தாயா? அல்லது சாவு உனக்குத் தேதி குறித்ததா?

"தாயக மண்ணின் காற்றே நீயும் மூசம்மா. நான் சாகும் நேரம் கடலே நீயும் மூசம்மா -" பாடிய தோழி இங்கு குலுங்கிக்குலுங்கி அழுதாள் துளசி. இந்தப் பாடல்வரியில் நீ இனி அடிக்கடி வந்துவந்து போவாய்.

சாகும்போது சாதனைதான் படைத்தாய். உனக்கு அன்று ஓய்வும்கூட. நீ இழந்துபோன அத்தனை நித்திரையையும் வெறியுடன் அனுபவிப்பவள்போல் எத்தனை அழகாய்த் தூங்கினாய் துளசி!

இப்போதெல்லாம்...

"தத் தெய்தாம் தித் தெய்தாம்" என்ற ஜதியில் நீ தெரிவாய்.

வேவு நேரத்தில், அந்த மௌனித்த இருளில் காற்றோடு உன் குரல், "ஏய் கவனம் அசையாதை ....." என்பதுபோல கிசுகிசுத்து நிற்கும்.

சிவந்துபோன உன் தோழியர் கண்களில், உனைக் காண்போம் அதை உன் கண்களாய் .....

மௌனித்த தோழியில் நீயாக .....

ஓ... அந்த அன்னையின் விசும்பலில் தெறிக்கும் உன் பிரிவுத் துயர்...... அந்த போராளித் தங்கையை இறுகவைத்திருக்கும் உன் இழப்பு...... உன் சின்னத் தம்பி தங்கையின் விழிநீர்த்திரையில் உன் முகமாய் .......

உன் அன்னைக்காய், உன் சகோதரர்க்காய், உன் மௌனித்தழும் உன் தோழியர்க்காய்...... நிமிர்வதற்காய் .....

காற்றிலே நுழைந்து கவிஞையாய், நடிகையாய், நடன ஆசிரியையாய், சுழன்றாடும் வேவுப் புலியாய், "தத் தெய்தாம் தித் தெய்தாம்" ஜதியில் வந்து போகமாட்டாயா எமக்காய் ஓர் தடவை?

அந்த இருளை ஸ்பரிசித்து, நீயாக நினைத்தது மனம். உன்னுடன் பகிர்வதற்காய் நிறைய நிறைய விடயங்கள் துளசி

மீண்டும் நீ வா, ஒருதடவை எமக்காய்......! ○

# வெல்லும்வரை வேகம் குறைந்தால் செல்லும்வழி திசை மாறிவிடும்

**உலைக்களம்**

**வியாசன்**

வருங்காலம் வசந்தம்.
காற்றுக்கு இனிக் கொண்டாட்டம்.
சுகந்தவாசம் சுமந்து,
மந்தமாருதம் ஊர்கோலம் போகும்.
சந்ததிப் பெருக்கத்துக்காக......
மரங்களெல்லாம் தாய்மை அடையும்.
மாசிப்பனியில் மூட்டம் கலையும்.
வெள்ளை முகிற்கூட்டம் கையசைத்துப் போகும்.
சந்தனமும், பன்னீரும் மணக்க;
கிராமத்துக் கோவில்களில் கொடியேறும்.
மேளகாரரின் கழுத்தில் சங்கிலி குடியேறும்.
காஞ்சிபுரமும், மைசூரும் சலவைக்குப் போய் தயாராகும்.
இளசுகளுக்கு முளைத்த மீசை முறுக்கேறும்.
வசந்தம் வந்தால் எல்லாமும் வடிவுதான்.
எங்கள்மண் மட்டும்தானே
இளவேனில் தழுவாத நிலமாகிப் போச்சு.
இப்போது குயிற்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு;
ஏன் கேட்பதில்லை?
சிறுவர்களெல்லாம் எங்கே தொலைந்தனர்?
வானத்தைப் பார்த்தபடியே கோவிலுக்குப் பயணம்.
உள்வீதிக்குள்ளே சாமிஉலா.
இருட்டுக்குள்ளே முகம் தேடும் இளசுகள்.
விளக்கற்ற வீதியில் கடலை வியாபாரம்.
மேற்கு வீதியின் மேளச்சமாவை
எங்கள் தாயகம் இழந்துவிட்டது.
எட்டுமூலைப்பட்டம் கட்டி ஏற்றியவானம்
குண்டு வீச்சுவிமானங்களுக்காகவா காத்திருப்பது?
அரிவி வெட்டிச் சூடடுக்கியவுடன்
அந்த வயல்களில் ஒரு வாசம் வீசுமே,
அதையினி மூக்கு எப்போது முத்தமிடும்?
தாமரை படர்ந்த கிராமத்துக் குளங்களில்
கொடிவிலத்திக் குளிப்பது எப்போது?
இந்தவருடத்து வசந்தத்தையும் இல்லாதழிக்க;
எதிரி விஷக்காற்றை வீசுவான்.
எறிகணைப்புகை கொடிகளில் படிவதா?
விடக்கூடாது.
வில்லை வளைத்து நாணேற்று.
மீண்டும் "சமாதானப் பேச்சு"
தலைப்புச் செய்தியாகிவிட்டது.
விவாகரத்துத் தம்பதிகளுக்கு பஞ்சணை விரிக்கப்படுகிறது.
கழுத்தை நெரித்தவன் கையும்,
துடித்துப் புரண்டவன் கையும்,
குலுக்கிக் கொள்ள எப்படித் தேதி குறிக்கமுடியும்?
வேண்டாமென்று வெட்டிய வேர்களை
கட்டுப் போட்டுக் காப்பாற்ற முடியுமா?
இனங்களுக்கிடையே
இழந்துபோன உறவை ஏற்படுத்துவதென்பது
உடைந்துபோன கதிரைக்கு
ஒட்டுப் போடுவது போன்றதல்ல......
முறிந்த மரத்துக்கு முட்டுக் கொடுத்து நிறுத்துவதல்ல——
உறவென்பது புரிந்துணர்விலிருந்து புலரவேண்டும்.
தன்னைப்போல மற்றவனையும் நேசிப்பவனே
உறவுக்கு உரம் போடமுடியும்.
கெமுனுவின் கதையைச் சொல்லிக் கொண்டு
மகாவலிகங்கையை வடக்கே திருப்பமுடியாது.
சிங்கள அரசுக்கு——
தமிழர் கொடுத்த அவகாசங்களெல்லாம்
அர்த்தமின்றி அழிந்து போனதே வரலாறு.
தமிழன் நெஞ்சை நிமிர்த்தி நிமிர்ந்தபோதெல்லாம்
பேச்சுவார்த்தையென்று குனியச் செய்ததே
இதுவரை தொடரும் சரித்திரமாகிவிட்டது.
எல்லோரும் குறித்துக் கொள்ளுங்கள்,
இது தொடர்கதையாக இனியும் நீளக்கூடாது.
போராட்டமென்பதை
வெறும் துப்பாக்கிகள் மட்டும் தீர்மானிக்கமுடியாது.
ஒத்துக்கொள்ளலாம்.
விடுதலையை பேச்சுவார்த்தை மூலமும் பெறமுடியாது.
இதையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.
சலுகைகளும், எலும்புத் துண்டுகளுமே
பேச்சுவார்த்தை மேசையில் பெறமுடியும்.
விடுதலையை இரத்தம் சிந்தியே வெற்றி கொள்ளமுடியும்
உலகம் இதையே உணரச் செய்துள்ளது.
ஒரு வியட்னாமியனைக் கேளுங்கள்.
ஒரு சீனத்துக் குடிமகனைக் கேளுங்கள்.
ஒரு கியூபா நாட்டவனைக் கேட்டுப் பாருங்கள் -
ஏன் பேச்சுவார்த்தை மூலம்
விடுதலையைப் பெறவில்லை யென்று.
தக்கபதில் தருவதற்கு அவர்களுக்கே தகுதியுண்டு.
குருதிக் குளத்தில் குளித்தெழுந்து
எஞ்சியுள்ளவர்களையும் அங்கவீனர்கள் ஆக்கிவிட்டு
சுடுகாட்டு மண்ணில் கிடைக்கும்
சுதந்திரம் யாருக்கு வேண்டும்?
விடுதலை வாழ்வதற்காக அன்றி சாவதற்காக அல்ல......
இப்படிக் காதோரம் குசுகுசுப்போர்
கனபேருண்டு.
பேச்சுவார்த்தைகள் முறிந்தபின்னர்தானே.
இந்தமண் போராடத் தொடங்கியது;
சுதந்திரப் போரென்பது;
சுற்றிச்சுற்றிவரும் சூத்திரக்கிணறு மாடுகளல்ல......
போராட்டமென்பது;
இலக்கைச் சென்றடையாமல்
தொடங்கிய இடத்துக்கே செல்வதல்ல.....
குருதிவழிவதைப் பார்க்கும் ஆசை எவருக்கும் கிடையாது.
பிணங்களுக்கிடையில் நிற்கும் வக்ரபுத்தியும் எமக்கில்லை.
வேண்டுவதெல்லாம் விடுதலை ஒன்றே.
அது பேச்சுவார்த்தை மூலமும் கிடைக்குமென்றால்
மேசையின் விரிப்பை நாங்களே விரிப்போம்.
கதிரைகளில் அமரக் காத்திருக்கின்றோம்.
அகலச் சிறகுவிரித்து ஆனந்தம்பாடும் பறவைபோல
தளையற்ற வாழ்வே தமிழருக்கு வேண்டும்.
வானுயர்ந்த மாடிமனைகள் மண்மேடாகி விட்டன.
கல்வியிற் சிறந்தவர்கள் "கைநாட்டு" ஆகிவிட்டனர்.
ஈழத்தமிழன் எலும்புக்கூடாக
ஒட்டியுலர்ந்து விட்டான்.
வீட்டுக்கு உள்ளும், வெளியும்
உயிருக்கு உத்தரவாதமில்லை.
உண்மைதான்.
அதற்காக .....
போராட்டத்தைப் பேச்சுவார்த்தையாக மாற்றமுடியாது.
பருத்தித்துறையிலிருந்து குமணவரை
தமிழீழத்தின் கடல் தழுவிச்செல்லும்நெடுஞ்சாலைவேண்டும்.
அந்த வீதியெங்கும் அழகான கிராமங்கள்
ஊரெங்கும் தமிழர் உழைக்கும் ஓசைகள்.
பூரித்த முகத்தோடு புன்னகைக்கும் மனிதர்கள்.
இல்லானும் இல்லை...... இருப்பானும் இல்லை——
இதுதான் தமிழீழம்.
இதற்காகவே போராட்டம்.
வெல்லும்வரை வேகம் குறைந்தால்
செல்லும்வழி திசை மாறிவிடும். ○